பக்கங்கள்: 12 விலை: 20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 03 வள்ளுவர் ஆண்டு 2050 வைகாசி 16 வியாழக்கிழமை 30.05.2019 கதிர் 206

**இனி இது ரகசியம் அல்ல!**

கூட்டமைப்பு எம்.பி. ஒருவரின் சோகக் கதையைக் கேட்க மிகப் பரிதாபமாக இருந்தது. அந்த சோகத்தை இன்று வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ளலாம் என்று நினைக்கிறேன்.

பக்கம் 02 »

## அரச வங்கியில் வேலை தருவதாக யாழ்ப்பாணத்தில் பணம் மோசடி!

### விழிப்பாக இருக்கக் கோருகிறது பொலிஸ்

யாழ்ப்பாணம், மே 30

அரச வங்கியில் வேலைவாய்ப்புப் பெற்று தருவதாகக் கூறி பல லட்சம் ரூபா பணத்தை மோசடி செய்த நபர் தொடர்பில் தமக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன என, அது தொடர்பில் விழிப்

பக்கம் 11 »

## அதிரடி காட்டினார் பூஜித!

### பதவி நீக்கத்துக்கு எதிராக உயர்நீதிமன்றில் மனுத் தாக்கல்



கொழும்பு, மே 30

பொலிஸ் மா அதிபர் பதவியிலிருந்து தன்னை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நீக்கியமைக்கு எதிராக பூஜித ஜயசுந்தர அடிப்படை உரிமை மீறல் மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

உயர்நீதிமன்றத்தில் நேற்று அவர் அடிப்படை உரிமை மீறல் மனுவை தாக்கல் செய்தார்.

சட்டத்தரணி தினேஷ் விதான பத்திரண ஊடாக இந்த மனு தாக்கல் செய்யப்பட்டது.

அந்த மனுவில் பதில் பொலிஸ் மா அதிபர், அரசமைப்புக் கவுன்ஸில் உறுப்பினர்கள், முன்னாள் பாதுகாப்புச் செயலாளர்

பக்கம் 11 »

# தாக்குதலாளிகள் குறித்து முன்னரே புலனாய்வுத் தகவல்கள் கிடைத்தன!



### நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு முன்னால் நேற்று உண்மையை ஒப்புக்கொண்டார் பாதுகாப்புச் செயலர்

**“தாக்குதலாளிகள் குறித்து புலனாய்வுத் துறையினருக்கு முன்னரே தகவல்கள் கிடைத்தாலும் சில இடங்களில் உள்ள குறைபாடுகள் இருந்த காரணத்தினால் பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியாமல் போனது. ஆனாலும் நாம் 99 வீதம் இப்போது உடனடி அச்சுறுத்தலை தடுத்து நிறுத்தியுள்ளோம்.**

**-இவ்வாறு தெரிவித்தார் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் (ஓய்வு) சாந்த கோட்டேகொட.”**

பக்கம் 11 »

## நூற்றுக்கணக்கானோர் உயிரிழப்புக்கு ரிஷாத் மட்டுமல்ல அரசுமே பொறுப்பு

### சாடுகின்றது ஜே.வி.பி.

கொழும்பு, மே 30

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலில் கொல்லப்பட்ட நூற்றுக்கணக்கான உயிர்களுக்கு ரிஷாத் மட்டுமன்றி முழு அரசுமே பொறுப்புக் கூறவேண்டும் என ஜே.வி.பி.யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

அத்தோடு அமைச்சர் ரிஷாத் பதியுதீனுக்கு மாத்திரம் தண்டனை பெற்றுக் கொடுத்துவிட்டு அரசைப் பாதுகாக்க வேண்டிய தேவை மக்கள் விடுதலை முன்னணிக்கு கிடையாது

பக்கம் 11 »



## தௌஹீத் ஜமாத் பள்ளிவாசல் அடித்துடைத்து அகற்றப்பட்டது

கொழும்பு, மே 30

கெக்கிராவ, மடாட்டுகமவில் அமைக்கப்பட்டிருந்த தேசிய தௌஹீத் ஜமாத்தின் பள்ளிவாசல் நேற்று ஊர்மக்களால் உடைத்து அகற்றப்பட்டது.

ஊர் பள்ளிவாசல்

பக்கம் 02 »

## தாக்குதல் சம்பவங்கள் பற்றி நான் தெரிந்திருக்கவில்லை!

### கைவிரித்தார் புலனாய்வுத் தலைவர்


கொழும்பு, மே 30

சஹ்ரானின் தாக்குதல் குறித்தோ அல்லது அது தொடர்பாக வந்த முன்னெச்சரிக்கை குறித்தோ தமக்கு எதுவும் தெரியாதென

பக்கம் 11 »

## வாள்வெட்டுக் கும்பல் நேற்று கிளிநொச்சியில் அட்டகாசம்!

### கர்ப்பிணி உட்பட ஒன்பது பேர் காயம்



கிளிநொச்சி, மே 30

கிளிநொச்சி செல்வாநகர் பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவங்களின்போது கர்ப்பிணிப் பெண் உட்பட

பக்கம் 11 »

## மைத்திரியின் தரப்பை விட்டு கழன்றார் பிரபா கணேசன்!

### வன்னிக் கருத்திட்ட பணிப்பாளர் பதவியைத் தூக்கிக் கடாசினார்

கொழும்பு,மே30

கடந்த இரண்டு வருட காலமாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்குக் கீழ் வரும் அமைச்சின் ஊடான அபிவிருத்திக் கருத்திட்டப் பணிப்பாளராகக் கடமையாற்றிய ஜனநாயக மக்கள் காங்கிரஸ் தலைவரும்

பக்கம் 11 »

## பலாலி வீதியில் ஓட்டோ மோதி வயோதிபர் அந்த இடத்தில் பலி!

யாழ்ப்பாணம், மே 30

யாழ்ப்பாணம் – பலாலி வீதியில் நேற்றுக் காலை 8:30 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் வயோதிபர் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

பக்கம் 11 »

## பொலிஸ் கான்ஸ்டபிள் மீது ராஜகிரியவில் கத்திக்குத்து!

கொழும்பு, மே 30

போதைப்பொருள் பாவனையில் ஈடுபட்ட ஒருவரைக் கைது செய்யச் சென்ற வெலிக்கடைப் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் மீது கத்திக்குத்து மேற்கொள்ளப்பட்டுள்ளது.

படுகாயமடைந்த கான்ஸ்டபிள் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

ராஜகிரிய, ஒபேசேகரபுர சர்வோதய மாவத்தையில் இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது. (ஐ)

## ஞானசாரரின் கருத்துக்கு துருக்கி தூதரகம் மறுப்பு

கொழும்பு, மே 30

பொதுபல சேனா அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் தெரிவித்த கருத்து

பக்கம் 11 »

# இலங்கை குறித்து அமெ. அறிக்கை; கண்டிக்கின்றது மன்னிப்புச் சபை

கொழும்பு, மே 30

அமெரிக்காவினால் வெளியிடப்பட்ட 2018 மனித உரிமைகள் அறிக்கையில் இலங்கை குறித்து தெரிவிக்கப்பட்டிருக்கும் தகவல்கள் பலவீனமானவையாகவும் தவறான எண்ணத்தை தோற்றுவிப்பவையாகவும் உள்ளன என்று சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.

இலங்கையின் மனித உரிமை நிலைவரத்தில் மேம்பாடு ஏற்பட்டுள்ளதெனும் எண்ணத்தைத் தோற்றுவிக்கக்கூடிய வகையில் அமெரிக்காவின் அறிக்கை அமைந்திருக்கின்றது என்றும் சர்வதேச மன்னிப்புச் சபை குறிப்பிட்டுள்ளது.

கடந்த வருடம் இலங்கையில் சில சட்டவிரோத கொலைகள், சித்திரவதைகள், அடாத்தான தடுப்புக் காவல், மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் துன்புறுத்தப்படல் உட்பட பல அத்துமீறல்கள் இடம்பெற்றன எனத் தெரிவித்துள்ள சர்வதேச மன்னிப்புச் சபை, போர்க் காலத்தில் உரிமை மீறல்களையும் துஷ்பிரயோகங்களையும் செய்தவர்கள் சட்டத்தில் சிக்காமல் இருக்கும் போக்கு இன்னமும் தொடர்கிறது என்றும் கூறியுள்ளது.

இதேவேளை, அரச படைகள் அத்துமீறல்களைச் செய்து விட்டு சட்டத்துக்கு அப்பாற்பட்டவர்களாகச் செயற்படுகின்ற போக்கு தொடர்பான உண்மை நிலை அந்த அறிக்கையில் குறைத்து கூறப்பட்டிருக்கின்றதென்றும் சர்வதேச மன்னிப்புச் சபை சுட்டிக்காட்டியுள்ளது. (ஐ)

## சத்தியமூர்த்திக்கு நிரந்தர நியமனம்



யாழ்ப்பாணம், மே 30

யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளராக வைத்தியர் த. சத்தியமூர்த்தி நிரந்தரமாகவே (இடமாற்றங்களுக்கு உட்படாத இறுதி நிலைப் பதவியில்) சுகாதார அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதன் மூலம் அவர் ஓய்வூதியம் பெறும்வரை யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளராகக் கடமையாற்ற முடியும்.

மார்ச் 27 ஆம் திகதிய அமைச்சரவை அனுமதியுடன் இலங்கையில் உள்ள ஒன்பது வைத்தியசாலைகளுக்கு இவ்வாறு நிரந்தரப் (இடமாற்றம் அற்ற) பணிப்பாளர் பதவிக்கு சிரேஷ்ட வைத்திய நிர்வாக அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர.

அந்தவகையில் கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை, கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலை, கொழும்பு லேடி ரிச்வே சிறுவர் வைத்தியசாலை, கராப்பிட்டிய போதனா வைத்தியசாலை, யாழ் போதனா வைத்தியசாலை, அநுராதபுரம் போதனா வைத்தியசாலை, மட்டகளப்பு போதனா வைத்தியசாலை, கண்டி போதனா வைத்தியசாலை, பேராதனை போதனா வைத்தியசாலைகளின் பணிப்பாளர் பதவிகளை இறுதி நிலைப் பதவிகளாக மாற்றுவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இதில் கொழும்பு வடக்கு, தெற்கு, யாழ்ப்பாணம், கண்டி, பேராதனை வைத்தியசாலைகளில் தற்போதுள்ள பணிப்பாளர்கள் நிரந்தரமாகவே கடமையாற்றுவதோடு ஏனைய வைத்தியசாலைகளுக்கு விரைவில் புதிதாக நிரந்தர (இடமாற்றங்களுக்கு உட்படாத) பணிப்பாளர்கள் நியமிக்கப்படவுள்ளனர். (ஐ)

## பருத்தித்துறை துறைமுக பகுதிக்கு வடக்கு மாகாண ஆளுநர் விஜயம்



யாழ்ப்பாணம், மே 30

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியில் மீள் புனர்நிர்மாணம் செய்யப்படவுள்ள பருத்தித்துறை துறைமுகப் பகுதிக்கு நேற்று மாலை விஜயம் மேற்கொண்ட ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் துறைமுகத்தின் ஆரம்ப அபிவிருத்தி நிலைமைகள் குறித்து ஆராய்ந்தார்.

பருத்தித்துறை பிரதேச மீனவர்களின் பொருளாதார நிலைமையை மேம்படுத்தும் நோக்கில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் ஆரம்பிக்கப்படவுள்ள இந்தத் துறைமுக அபிவிருத்தி செயற்திட்டத்தை முன்னெடுப்பதில் எதிர்கொள்ளும் சவால்கள் தொடர்பில் ஆளுநரின் இந்த விஜயத்தில் ஆராயப்பட்டது.

துறைமுகத்துக்கு அண்மையில் அமைந்துள்ள மெதடிஸ்த பாடசாலைக்கும் ஆளுநர் விஜயம் செய்தமையுடன் அப்பாடசாலையின் பெற்றோர் மற்றும் பழைய மாணவர் சங்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் பருத்தித்துறை ஆய்வு நிறுவனத்தின் பணிப்பாளர் முத்துக்கிருஷ்ணா சர்வானந்தன் ஆகியோருடனும் கலந்துரையாடினார்.

இதனைத் தொடர்ந்து பருத்தித்துறை கடற்கரையில் அமைந்துள்ள நடராஜா திறந்தவெளி கலையரங்கு பிரதேசத்திற்கு விஜயம் செய்த ஆளுநர் அப்பகுதி மக்களுடன் சினேகபூர்வ கலந்துரையாடலிலும் ஈடுபட்டார். (ஐ)

## கரடிப் பொம்மை வேடம் அணிந்து மாணவரின் புத்தகப்பை சோதனை

கொழும்பு, மே 30

களுத்துறையில் ஸ்ரீ தேவானந்தா மகாவித்தியாலாய மாணவர்களின் புத்தகப் பைகள் சோதனையை ஆசிரியர் ஒருவர் கரடிப் பொம்மை வேடமிட்டு மேற்கொண்டமை பலரது பாராட்டையும் பெற்றுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தற்கொலைத் தாக்குதலை அடுத்து பாதுகாப்பு நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டு உள்ளன. இந்நிலையில் பாடசாலை செல்லும் மாணவர்களின் புத்தகப் பைகள் தினமும் பாடசாலை நுழைவாயிலில் வைத்து இராணுவத்தினர், பொலிஸார் மற்றும் ஆசிரியர்களால் சோதனை செய்த பின்னரே அவர்கள் பாடசாலைக்குள் அனுமதிக்கப்படுவார்கள்.

இந்தச் சோதனை நடவடிக்கையின்போது மாணவர்களின் உணவுப் பொதிகள் சோதனை, சோதனையிடுவோரின் செயற்பாடுகள் குறித்து மாணவர்களின் பெற்றோர்கள் மத்தியில் கடும் அதிருப்தி காணப்பட்டு வந்தது.



இந்நிலையில், களுத்துறையில் ஸ்ரீ தேவானந்தா மகாவித்தியாலாய ஆசிரியர் ஒருவர் கரடிப் பொம்மை வேடமணிந்து மாணவர்களை சோதனையிடும் நடவடிக்கையில் இறங்கியுள்ளார். இந்தச் செயல் மாணவர்கள் மத்தியில் இருந்த பயத்தைப் போக்கி அவர்களை மகிழ்வித்துள்ளது.

அந்த ஆசிரியரின் செயலைப் பலரும் பாராட்டியுள்ளமையுடன் அவரின் படங்களையும் சமூக வலைத்தளங்களில் பகிர்ந்துள்ளனர். அந்தப் படங்கள் தற்போது வைரலாகி உள்ளன. (ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கம்பெரலியத் திட்டத்தின் நடைமுறையாக்கத்தை நேரில் சென்று பார்வையிடுவதற்கான போக்குவரத்து அலவன்ஸ் என்ற பெயரில் அரசுத் தரப்பு எம்.பிக்களுக்கு மாதாந்தம் இரண்டு லட்சம் ரூபா தொகை சுளையாக வழங்கப்பட்டு வருகின்றமை குறித்து இப்பத்தியில் ஏற்கனவே நான் பிரஸ்தாபித்திருந்தமை வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

அரசுத் தரப்பில் ஐ.தே.கட்சியின் எம்.பிக்களுக்கு மட்டுமல்லாமல், ஆளும் கட்சியில் இருக்கின்ற – ஐக்கிய தேசிய முன்னணியின் – ஏனைய எம்.பிக்கள் எல்லோருக்கும் இது வழங்கப்பட்டு வருகிறது. அரசுத் தரப்பில் முஸ்லிம் எம்.பிக்கள், மலையக எம்.பிக்கள் எல்லோருக்கும் மாதாந்தம் மேலதிகமாக 'போக்குவரத்து அலவன்ஸ்' என்ற பெயரில் சுளையாக இது தொடர்ந்து கிடைத்து வருகிறது.

அரசுத் தரப்புக்கு ஆதரவளிக்கின்றமையால் கூட்டமைப்பு எம்.பிக்களுக்கும் இந்தத் தொகை இப்போது வழங்கப்படத் தொடங்கியிருக்கின்றது, முதலாவது மாதக் கொடுப்பனவு வழங்கப்பட்டு விட்டது என்றெல்லாம் இரு மாதங்களுக்கு முன்னர் இப்பத்தியில் நான் எழுதியிருக்கின்றமை வாசகர்களுக்கு நினைவில் இருக்கலாம்.

அந்தச் செய்தியை நான் எழுதி அடுத்த நாள் கூட்டமைப்பின் யாழ். எம்.பி. ஒருவர் என்னுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டார்.

*அப்படி ஒரு கொடுப்பனவு வழங்குகின்றார்களா? எனக்குத் தெரியவில்லையே?"* – என்றார் அந்த எம்.பி.

*"உங்கள் வங்கிக் கணக்கை ஒரு தடவை 'செக்' பண்ணுங்கள். அதில் சில தினங்களுக்கு முன்னர் இரண்டு லட்சம் ரூபா வந்திருக்காவிட்டால் என்னுடன் பேசுங்கள் பார்க்கலாம்"* – என்றேன் நான். (ஏதோ அந்தப் பணத்தை வைப்பிலிட்டவன் நானே என்ற மாதிரித் தினுசில்)

அவர், அதற்குப் பின்னர் அது விடயம் குறித்து என்னுடன் பேசவேயில்லை. பணம் அவர் கணக்குக்கு வந்திருக்கும், அதனால் ஏன் அது குறித்துப் பேசுவான் எனக் கருதி விட்டு விட்டிருப்பார் என நினைத்துக் கொண்டேன். அதுவே நடந்திருக்கும்.

இந்த மாதாந்தக் கொடுப்பனவை நம்பி ஆண்டி மடம் கட்ட நினைத்த மாதிரி மற்றொரு கூட்டமைப்பு எம்.பி. திட்டம் போட்டார்.

விறுவிறுவென ஒரு வங்கிக்குப் போனார். பதினெட்டு லட்சம் ரூபா கடன் எடுத்தார் – ஏதோ ஒரு தேவைக்கு. மாதாந்தம் ஒரு லட்சத்து அறுபதாயிரம் ரூபா கடன் தொகை வங்கிக்குக் கட்ட வேண்டும். மாதம் தோறும் மேலதிகமாக வரப்போகும் இரண்டு லட்சம் ரூபாவில் அதைக் கட்டி முடித்துவிடலாம் என்பது அவர் நம்பிக்கை.

அந்தக் கடனுக்குப் பிணைக் கையெழுத்திட்டவர்கள் யார் தெரியுமா? வன்னியில் ஒருவரும், மட்டக்களப்பில் ஒருவருமாகக் கூட்டமைப்பின் மற்றைய இரு எம்.பிக்கள்தாம்.

கடன் எடுத்த எம்.பி. இப்போது தலையில் கையை வைத்துக் கொண்டு நடு வீதியில் குந்தியிருக்கும் நிலைமை.

மேற்படி இரண்டு லட்சம் ரூபா முதல் கொடுப்பனவு உள்நாட்டலுவல்கள் அமைச்சு மூலம் முன்னறிவித்தல், விளக்கம், காரணம் ஏதும் கூறாமல் பெப்ரவரி மாதம் கூட்டமைப்பு எம்.பிக்களின் வங்கிக் கணக்கில் வைப்பிலிடப்பட்டது.

அப்போதுதான் வரவு–செலவுத் திட்டம் விவாதத்துக்கு வந்த காலம். கூட்டமைப்பின் அமோக ஆதரவுடன் வரவு – செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டுவிட்டதல்லவா?

அந்த பெப்ரவரி மாதக் கொடுப்பனவுக்குப் பின்னர் இப்போது மார்ச், ஏப்ரல் கடந்து, மே மாதமும் நாளையுடன் முடியப் போகிறது. கூட்டமைப்பு எம்.பிக்கள் தங்கள் வங்கிக் கணக்குகளை ஒவ்வொரு நாளும் 'செக்' பண்ணிப் பாத்தது தான் மிச்சம்.

அந்தப் பெப்ரவரி கொடுப்பனவுக்குப் பிறகு – அந்த இரண்டு லட்சம் ரூபா மாதாந்தம் வரும் என எதிர்பார்க்கப்பட்ட தொகை – இன்று வரை வரவேயில்லை.

வரவு – செலவுத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக கூட்டமைப்புக்கு ஆசை காட்டும் விதத்தில் செலுத்தப்பட்ட அந்தத் தொகை, வரவு – செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டதும் 'கட்' ஆகி விட்டது போலும்...!

ஆனால், ஆளும் தரப்பின் ஏனைய எம்.பிக்கள் எல்லோருக்கும் அது தொடர்ந்து பட்டுவாடா ஆகிக்கொண்டுதான் இருக்கின்றது.

பாவம்.. இந்த இரண்டு லட்சம் ரூபாவை நம்பி வங்கிக்கடன் எடுத்த நம் எம்.பிதான். வங்கிக்கான மாதாந்த நிலுவையைக் கட்ட முடியாது முழுசிக் கொண்டு நிற்கின்றார் அவர்.

இப்படிக் கூட்டமைப்பு எம்.பிமாருக்கு மட்டும் இந்தக் கொடுப்பனவை ஒரு மாதத்துடன் நிற்பாட்டி ஏமாற்றும் அளவுக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தரப்பு அவ்வளவு ஒன்றும் குள்ளத்தனமான அணி என்று நான் நினைக்கவில்லை.

இப்படிக் கூட்டமைப்பு எம்.பிமார் மாதாந்தம் இரண்டு லட்சம் ரூபாவை – அரசுத் தரப்பு எம்.பிக்கள் மட்டும் பெறுகின்ற தொகையை – அரசுத்தரப்பிடமிருந்து தொடர்ந்து பெற்றால், அதைக் காட்டி அரசியல் ரீதியாக தமிழ் மக்கள் மத்தியில் அதையே வத்தியாக வைத்து, கூட்டமைப்பின் செல்வாக்கை வீழ்த்தி விடுவார்கள் என்ற அச்சத்தில் கூட்டமைப்பின் சில முக்கிய தரப்புக்கள்தாம் இந்தக் கொடுப்பனவை கூட்டமைப்பினருக்குத் தொடர்ந்து வழங்க வேண்டாம் என்று பிரத்மர் ரணிலுக்குக் கயிறு கொடுத்து, இதை நிறுத்தச் செய்திருக்கும் என்பதுதான் எனது அனுமானம்.

கூட்டமைப்பினருக்கு மாதாந்தம் இரண்டு லட்சம் ரூபா மேலதிகமாகச் சுளையான கொடுப்பனவு என்று நான் இந்தப் பத்தியில் எழுதித் தங்கள் வருமானத்துக்கு ஆப்பு வைத்துவிட்டேன் என்று என்னை நோவதை விட, பிரதமர் ரணிலிடம் போய் இந்தக் கொடுப்பனவை நிறுத்தும்படி பரிந்துரைத்து, வழிப்படுத்திய கூட்டமைப்புத் தலையை சம்பந்தப்பட்ட எம்.பிக்கள் தேடிப் பிடித்து அந்தத் தலையை நோவதுதான் பொருத்தமானதும் சரியானதுமாகும் என்பதே என் கருத்து. நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள் வாசகர்களே...?

**- மின்னல் -**

## தௌஹீத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிர்வாகம் மற்றும் மக்கள் ஒன்று கூடி இந்த தீர்மானத்தை எடுத்தனர்.

நூலகம் ஒன்றை அமைக்க ஒதுக்கப்பட்ட காணியில் தேசிய தௌஹீத் ஜமாத் வெளிநாட்டு நிதியுதவியுடன் பள்ளிவாசலை அமைத்ததாக ஊர்மக்கள் தகவல் வெளியிட்டுள்ளனர். (ஐ)

# மட்டக்களப்பு நகரத்தில் சக்திமிக்க கிளைமோர்!



மட்டக்களப்பு, மே 30

மட்டக்களப்பில் நேற்றுக் காலை அதிசக்தி வாய்ந்த கிளைமோர் ஒன்று மீட்கப்பட்டது. பூம்புகார், கண்ணகி அம்மன் ஆலய வீதி, களப்பு பகுதியில் கைவிடப்பட்ட நிலையில் கிளைமோர் குண்டு கண்டுபிடிக்கப்பட்டது.

மட்டு. மாநகர சபை சுகாதார ஊழியர்கள் நேற்றுக் காலை களப்பு பகுதியைச் சுத்தம் செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது கிளைமோர் குண்டைக் கண்டு பிரதி முதல்வருக்கு தெரிவித்தனர்.

இதனை அடுத்து இராணுவத்தின் குண்டு செயலிழக்கும் பிரிவினர் கிளைமோரை மீட்டனர். இது விடுதலைப் புலிகளின் காலத்தில் பயன்படுத்தப்பட்ட கிளைமோர் என தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

# நொச்சியாகம விபத்தில் வவுனியா இளைஞன் சாவு

வவுனியா, மே 30

வவுனியாவில் இருந்து விமான நிலையத்துக்கு வாகனத்தில் சென்று திரும்பிய நிலையில் நொச்சியாகம பகுதியில் விபத்தில் சிக்கி வவுனியா இளைஞன் மரணமடைந்தார்.

வவுனியாவில் இருந்து நேற்று முன்தினம் விமான நிலையத்துக்கு சென்று மீண்டும் வவுனியா நோக்கிப் பயணிகள் வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது நொச்சியாகம பாலத்தில் வாகனம் விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதன் காரணமாக வாகனத்தில் இருந்த வவுனியா தவசிகுளத்தைச் சேர்ந்த விஜயகுமார் தனுசன் (வயது – 23) என்ற இளைஞன் மரணமடைந்துள்ளார்.

வாகனத்தில் பயணித்த மேலும் நால்வர் காயமடைந்துள்ள நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருன்றனர். (ஐ)



# மன்னார் பாடசாலைகள் புத்தளத்தில்; உடனடியாகக் கவனத்தில் எடுங்கள்!

## வடக்கு ஆளுநருக்குச் செல்வம் எம்.பி. கடிதம்

மன்னார், மே 30

மன்னார் மாவட்டத்துக்குரிய பல பாடசாலைகள் தற்போதும் புத்தளம் மாவட்டத்தில் இயங்கி வருகின்றமை தொடர்பில் கவனமெடுத்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வன்னி நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் வடக்கு மாகாண ஆளுனரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் ஆளுநருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அதில் அவர் தெரிவித்துள்ளவை வருமாறு:-

மன்னர் மாவட்டத்துக்குட்பட்ட பல பாடசாலைகள் இன்னும் புத்தளம் மாவட்டதிலேயே இயங்கிக் கொண்டிருக்கின்றன. அந்த ஆசிரியர்களுக்குரிய சம்பளமும் அங்கு அனுப்பப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

1990 ஆம் ஆண்டு வடக்கு மாகாணத்தில் இருந்து முஸ்லிம் மக்கள் வெளியேற்றப்பட்டிருந்ததால் அந்த மாணவர்கள் அங்கு கல்வி கற்பதற்காக ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்பட்டிருந்தன. நாட்டில் சுமூகமான சூழ்நிலைகள் ஏற்பட்ட பின்னரும் அந்தப் பாடசாலைகள் புத்தளம் மாவட்டத்திலேயே இயங்கிக் கொண்டிருக்கின்றன.

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்கள் பெரும் இன்னல்களுக்கு முகம் கொடுத்து கல்வியைக் கற்று உயர்தரப் பரீட்சைக்கு தோற்றுகின்றனர். இந்நிலையில்



புத்தளத்தில் கற்கும் மாணவர்கள் பல வசதிகளுடன் கற்றலை மேற்கொண்டு மன்னார் மாவட்டத்தில் உயர்தரப்பரீட்சைக்கு தோற்றுகின்ற நிலையில் அவர்களும் மன்னார் மாவட்டத்தின் வெட்டுப்புள்ளியிலேயே கணக்கெடுக்கப்படுகின்றனர்.

இதன் காரணமாக மன்னாரிலேயே இருந்து மன்னாரில் கல்வி கற்கின்ற மாணவர்களுக்கான வாய்ப்புக்கள் தட்டிப் பறிக்கப்படுகின்றமையால் கடுமையான பாதிப்புக்களை எதிர் நோக்கிவருகின்றனர். புத்தளத்தில் இயங்கும் பாடசாலைகள் புத்தளம் மாவட்டதினுள்ளேயே பதிவு செய்யப்படவேண்டும். இல்லையெனில் அந்தப் பாடசாலைகள் மன்னார் மாவட்டத்திலுள்ள தமது சொந்த இடங்களில் இயங்கி கல்வி நடவடிக்கைகளைமேற்கொள்ளவேண்டும் என ஒரு தீர்மானம் வட மாகாண சபையால் நிறைவேற்றப்பட்டது.

முன்னாள் வடமாகாண ஆளுநரின் கவனத்துக்கு இந்த விடயம் கொண்டு செல்லப்பட்டு அவர் இதற்கானநடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தார். எனினும் அவை இதுவரை நிறைவேற்றப்படாமலேயே உள்ளன.

இதன் மூலம் மன்னார் மாவட்டத்தில் உயர்கல்வி கற்கின்ற மாணவர்கள் கடுமையாகப் பாதிக்கப்படுகின்றனர். மன்னார் மாவட்ட மாணவர்களின் வளங்கள் புத்தளம் மாவட்டத்தினால் பயன்படுத்தப்படுகின்றன. இதனை ஏற்றுக் கொள்ள முடியாது.

ஆகவே இதை நீங்கள் உடனடியாகக் கவனத்தில் கொண்டு இந்தப் பாடசாலைகளைப் புத்தளம் மாவட்டத்தினுள் பதிவு செய்யுமாறும், இல்லையெனில் அந்தப் பாடசாலைகள் மன்னார் மாவட்டத்தில் இயங்க நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுக் கொள்கின்றேன் – என்றுள்ளது. (ஐ)

# குண்டு துளைக்காத 4 கார் மஹிந்தவுக்கு வழங்குவதா?

## கோரிக்கையை நிராகரித்தது அமைச்சரவை

கொழும்பு, மே 30

எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவுக்குக் குண்டு துளைக்காத கார் ஒன்றை வழங்கும் அமைச்சரவை பத்திரம் நேற்றுமுன்தினம் நிராகரிக்கப்பட்டது.

மஹிந்தவுக்குக் குண்டு துளைக்காத கார் வழங்கும் அமைச்சரவைப் பத்திரத்தை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவே சமர்ப்பித்திருந்தார். நேற்று முன்தினம் அமைச்சரவைக் கூட்டத்திலேயே இந்தச் சம்பவம் நடந்தது.

மஹிந்த தன்னிடம் குண்டுதுளைக்காத கார் வேண்டுமென கோரினார் என்றும், அதனால் இந்த அமைச்சரவைப் பத்திரத்தைச் சமர்ப்பிப்பதாகவும் ரணில் தெரிவித்தார்.

இதன்போது ஜனாதிபதி அதிருப்தி தெரிவித்துள்ளார். தன்னைவிட மஹிந்தவிடமே அதிக குண்டு துளைக்காத கார் இருக்கின்றன என்றும் ஜனாதிபதித் தேர்தலில் தோல்விடைந்த பின்னர் அவர் இரண்டு குண்டு துளைக்காத கார்களைத் தன்னுடன் கொண்டு சென்றார் என்றும் குறிப்பிட்டார்.

அத்துடன் ஒக்ரோபர் 26ஆம் திகதி பிரதமராகப் பதவியேற்ற பின்னர் மூன்றாவதாக இன்னொரு குண்டு துளைக்காத கார் வழங்கப்பட்டதாகவும், நான்காவதாக இன்னொரு கார் வழங்க வேண்டுமா என அமைச்சரவையைப் பார்த்து ஜனாதிபதி கேட்டுள்ளார். மஹிந்தவுக்கு இன்னொரு கார் வழங்க வேண்டியதில்லையென அமைச்சர்கள் கூட்டாகத் தெரிவித்தனர்.

ஜனாதிபதி, பிரதமரை விட அதிக குண்டு துளைக்காத கார்களை மஹிந்த வைத்துள்ளார், அப்படியானால் நாட்டின் ஜனாதிபதி யார் எனக் கூட்டத்தில் கேள்வியெழுப்பப்பட்டது.

இதையடுத்து, மஹிந்தவுக்கு இன்னொரு குண்டு துளைக்காத கார் வழங்குவதில்லையென முடிவாகி, ரணில் சமர்ப்பித்த அமைச்சரவை பத்திரம் நிராகரிக்கப்பட்டது. (ஐ)



# இலங்கை விமானப்படையின் புதிய தளபதி சுமங்கல டயஸ்!

கொழும்பு, மே 30

இலங்கை விமானப்படையின் புதிய தளபதியாக எயார் வைஸ் மார்ஷல் சுமங்கல டயஸ் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் விமானப்படையின் 17ஆவது தளபதியாவார்.

விமானப்படைத் தளபதியாக பதவி வகித்த எயார் மார்ல் கபில ஜயம்பதி நேற்றுடன் ஓய்வு பெற்றுள்ள நிலையில், இந்தப் புதிய நியமனத்தை நேற்றுக் காலை ஜனாதிபதி வழங்கினார். (ஐ)

# சாவகச்சேரி நகர சபைக்கு எதிராக வியாபாரிகள் நேற்றுப் போராட்டம்

யாழ்ப்பாணம், மே 30

சாவகச்சேரிச் சந்தை வியாபாரிகள் நேற்றுக் காலை முதல் கடைகளை அடைத்து நகரசபைக்கு எதிராகப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

நகரசபை தனியாருக்கு வழங்கியுள்ள சந்தை குத்தகையை மீளப்பெறப்படவேண்டும் அறவிடப்படும் வரி குறைக்கப்படவேண்டும், மலசல கூட வசதிகள் சுகாதாரமான முறையில் செய்துதரப்படவேண்டும் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்தே வியாபாரிகள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

சந்தையில் இருந்து பேரணியாகப் புறப்பட்ட வியாபாரிகள் ரயில் நிலைய வீதியூடாகச் சாவகச்சேரி நகரசபையைச் சென்றடைந்தனர். அங்கு நகரசபைத் தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதனிடம் மகஜர் ஒன்றையும் கையளித்தனர்.

கடையடைப்பு காரணமாக விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டனர். (ஐ)





# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000,
மின்னஞ்சல் - kalaikathirnews@gmail.com
இணையம் - https://kalaikathir.online

## பறி போகின்றது கன்னியா; என்ன கூறுகின்றார் சம்பந்தன்?

திருகோணமலை மாவட்டம் கன்னியாவிலுள்ள வெந்நீரூற்று விவகாரம் இலங்கைத் தமிழர்களைப் பொறுத்த வரை இப்பொழுது உணர்வெழுச்சியைத் தூண்டும் ஒரு விடயமாக மாறிவருகிறது.

நினைவு தெரிந்த காலம் முதல் பாரம்பரியமாகத் தமிழ்த் திருத்தலமாக விளங்கி வருவது கன்னியா வெந்நீரூற்று என்பது தமிழர்களின் கருத்துநிலைப்பாடு.

சரித்திர ரீதியாகவும், கர்ண பரம்பரைக் கதைகள் மற்றும் புராணக் குறிப்புகள் வாயிலாகவும் புனிதத் தமிழ் பிரதேசமாக மதிக்கப்பட்டு வந்த தலம் இது.

தமிழ் மன்னன் இராவணனினால் கன்னியா வெந்நீரூற்று ஸ்தாபிக்கப்பட்டது என்பது ஐதீகம். திருகோணமலை திருக்கோணேஸ்வரர் ஆலயத்தை அண்டியிருக்கும் 'இராவணன் வெட்டு' முதல் கன்னியா வெந்நீரூற்று வரை இலங்கேஸ்வரனைத் தொடர்புறுத்திப் பேசும் பழங்கதைகள் நம் மத்தியில் பிரபல்யம்.

தமிழர்களின் பாரம்பரியத்துடன் இரண்டறக் கலந்து விட்ட முக்கிய பிரதேசம் அது. வரலாற்றுச் சிறப்பு மிக்க இப்பகுதியைத் திட்டமிட்டு, வல்வந்தமாக சிங்கள, பௌத்த பேரினவாதத்தின் அடையாளமாக மாற்றும் முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றமை மிகப் பெரும் கொடூரமாகும்.

ஆட்சியாளர்களின் ஆசியுடன் முன்னெடுக்கப்படும் இந்தப் பேரினவாத நடவடிக்கை இலங்கையில் இனங்களுக்கு இடையில் சமாதானம், அமைதி, நல்லிணக்கம் இன சௌஜன்யம் போன்றவை உருவாக இடமளிக்க மாட்டாது என்பது நிச்சயம்.

கன்னியா வெந்நீரூற்றுக்கு அருகில் உள்ள வெல்கம் விகாரைப் பகுதித் தேரர்கள் வெந்நீரூற்றுப் பகுதியை வல்வந்தமாகக் கைப்பற்றுவதற்கு மேலாதிக்கத்தைப் பிரயோகித்து வருகின்றமையை ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் செயலாளர் நாயகமும் வவுனியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சிவசக்தி ஆனந்தன் அம்பலப்படுத்தியிருக்கின்றார்.

கன்னியா வெந்நீரூற்றுப் பகுதியில் உள்ள பிள்ளையார் ஆலயம் உடைக்கப்பட்டிருக்கின்றது. பலவந்தமாக அந்த ஆலயம் இருந்த காணியைக் கையகப்படுத்துவதற்கான அடாவடித்தன நடவடிக்கை மேலாதிக்கவாதிகளால் முன்னெடுக்கப்படுகின்றது.

நீண்ட காலமாக – பாரம்பரியமாக – சந்ததி சந்ததியாக – இந்தக் காணி தமிழர்களுக்குரியதாக இருந்து வருகின்றது. அதனைவிட்டுக் கொடுக்கத் தமிழர் தரப்பு இணங்காத சூழலில் அதைப் பிடுங்கி எடுப்பதற்காக அரசின் வர்த்தமானி அறிவித்தல் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக சிவசக்தி ஆனந்தன் எம்.பி. சுட்டிக்காட்டுகின்றார்.

வடக்கு, கிழக்கை சிங்கள, பௌத்த மயமாக்கும் அரசின் சுயரூபத்தை அம்பலப்படுத்திப் புட்டுக் காட்டும் உதாரணமாக கன்னியா வெந்நீரூற்றுக் காணி விடயம் அமைகிறது என்கின்றார் சிவசக்தி ஆனந்தன்.

அவர் சுட்டிக்காட்டும் இன்னொரு முக்கிய விடயம் இங்கு கவனிக்கற்பாலது.

விடுதலைப் புலிகள் இல்லாத நிலையில் அவர்களால் அடையாளப்படுத்தப்பட்டவர்கள் நாங்கள் என்ற உரிமையோடு, இலங்கைத் தமிழர்களின் தலைமைத்துவ உரிமையைக் கூட்டமைப்பினரே தங்களுக்குரியதாய்ப் பற்றி நிற்கின்றனர்.

அந்தக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனே இன்று ஒட்டுமொத்த தமிழர்களின் தலைவராகப் பார்க்கப்படுகின்றார்.

அவரது கோட்டையான திருகோணமலை மாவட்டத்தின் முக்கிய பகுதிகள் எல்லாம் சிங்கள, பௌத்த மயமாக்கல் நிகழ்ச்சி நிரலுக்குள் கபளீகரம் செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதை சிவசக்தி ஆனந்தன் சுட்டிக் காட்டுகின்றார்.

அதேபோன்ற கருத்து நிலைதான் இன்று தமிழின ஆர்வலர்கள் பலரின் மனதிலும் மாறாமல் குடிகொண்டிருக்கின்றது.

1977 முதல் பெரும்பாலும் தொடர்ந்து திருகோணமலை மாவட்டத்தின் நாடாளுமன்ற உறுப்பினராக இருப்பவர் சம்பந்தன் ஐயா.

ஆனால், அவருடைய காலத்தில்தான் திருகோணமலை மண் மோசமாக பேரினவாத சக்திகளின் ஆக்கிரமிப்பில் சிக்கி, தமிழர் தேசம் சுருங்கிக் கொண்டிருக்கின்றது.

பேரினவாதப் பிடியிலிருந்து தனது மாவட்டத்தைக் கூட – தனது தொகுதியைக்கூட – காபந்து பண்ண முடியாத இயலாமையில் இருக்கும் சம்பந்தன், எப்படி முழுத் தமிழினத்துக்கும் தலைமை தாங்கி, இனப்பிரச்சினைக்கான தீர்வைப் பெற்றுத் தரப் போகின்றார் என்ற கேள்வி பல தரப்பினராலும் இன்று எழுப்பப்படாமல் இல்லை.

என்ன சொல்லப் போகின்றார் சம்பந்தன் ஐயா?

# முழங்காவில் மரமுந்திரிகை பண்ணையை விவசாய அமைப்பிடம் வழங்க இணக்கம்

## வடக்கு ஆளுநர் -சிறிதரன் எம்.பி. சந்திப்பில்



கிளிநொச்சி, மே 30

வடக்கு ஆளுனர் சுரேன் ராகவனுக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனுக்குமிடையில் நேற்றுமுன்தினம் சந்திப்பு ஒன்று நடைபெற்றது.

இதன்போது பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டுள்ளன. கிளிநொச்சிசெஞ்சோலை மாணவிகளின் காணி விவகாரம் உள்ளிட்ட விடயங்கள் ஆராயப்பட்டன. கிளிநொச்சியில் செஞ்சோலை மாணவிகள் குடியிருக்கும் காணிகளைச் சிலர் உரிமை கோரும் விடயம் பற்றி ஆராயப்பட்டது.

முழங்காவிலிலுள்ள மரமுந்திரிகைபண்ணையைஅண்மையில் இராணுவம் விடுவித்திருந்தது. இதில் 215 ஏக்கர் நிலத்தை முழங்காவில் விநாயகர் விவசாயக் கூட்டுறவுச் சங்கத்துக்கு வழங்குவதற்கு ஆளுநர் இணக்கம் தெரிவித்திருந்தார்.

விவசாய கூட்டுறவுச் சங்கத்தின் மரமுந்திரிகை உற்பத்திக்கான தொழில் நுட்ப உதவியை, மரமுந்திரிகை கூட்டுத்தாபனம் வழங்கும் என்றும், பண்ணையில் விளையும் மரமுந்திரிகைகளையும் அந்தக் கூட்டுத்தாபனமே கொள்வனவு செய்யுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

இதேவேளை, வேலணை, ஊர்காவற்துறை, நெடுந்தீவு பிரதேச செயலகங்களின் அபிவிருத்தி விடயங்களை, யாழ் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்துக்கு புறம்பாக, மூன்று பிரதேச செயலகங்களையும் இணைத்து நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது. எதிர்வரும் 10ஆம் திகதிக்கு பின்னர் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தை நடத்த தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன் கிளிநொச்சியிலுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்குட்பட்ட பகுதிகளில் 10 கோடி ரூபாவுக்குரிய திட்டங்களை முன்மொழியுமாறும், அதை நிறைவேற்றித் தருவார் எனவும் ஆளுநர் இதன் போது குறிப்பிட்டிருந்தார் எனக் கூறப்பட்டது. (ஐ)

# வடக்கிலிருந்து கொழும்புக்கு இராணுவத்தினர் அணி நடை!





வவுனியா, மே 30

போர் முடிந்த 10ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இராணுவத்தின் ரணவிரு அணிநடை நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

யுத்த காலத்தில் மதவாச்சியில் இராணுவத்தின் சோதனைச்சாவடியொன்று இருந்தது. வடக்குக்கும் தெற்கிற்குமிடையிலான முக்கிய எல்லையாக இருந்த இந்தச் சோதனை நிலை யத்தின் முன்பாக அணிநடை ஆரம்பித்தது.

இராணுவத்தளபதி லெப்.ஜெனரல் மகேஷ் சேனநாயக்க இந்த நிகழ்வில் கலந்துகொண்டு அணிவகுப்பை ஆரம்பித்து வைத்தார்.

மதவாச்சி, அனுராதபுரம், திரிப்பன, மரதடன்கடவல, ஹபரன, தம்புள்ள, நாவுல, மாத்தளை, அக்குரன, கட்டுகஸ்தோட்ட, கண்டி, பேராதனை, கடுகன்னவா, மாவனல்ல, கேகாலை, வரகாபொல, நிட்டம்புவ, யக்கல, கடவத்த, கிரிபத்கொட, களனி, கிராண்ட்பாஸ், களனி, தெமடகொட ஊடாக கொழும்பை இந்த அணிநடை சென்றடைகிறது. சுதந்திர சதுக்கத்தில் அணிநடை முடிவடைகிறது.

சுமார் 600 இராணுவத்தினர் ரணவிரு அணிநடையில் பங்கு கொள்கின்றனர். (ஐ)

# ஓ.எல்., ஏ.எல். பெறுபேற்றுச் சான்றிதழை பிரதம தபாலகங்களில் பெறுவதற்கு வசதி

கொழும்பு, மே 30

கல்விப் பொதுத் தராதர உயர்தரம் மற்றும் சாதாரண தரப் பரீட்சைகளின் பெறுபேறுகளின் சான்றிதழ்களை நாட்டின் பிரதம தபாலகங்களில் பெறும் வசதியைக் கல்வி அமைச்சு அறிமுகப்படுத்தி உள்ளதாகக் கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் அறிவித்துள்ளார்.

நாட்டின் பிரதம தபாலகங்களில் எதிர்வரும் ஜூன் 6ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தொடக்கம் பரீட்சை பெறுபேற்றுச் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றுஅவர்தெரிவித்துள்ளார்.

கல்விப் பொதுத் தராதர உயர்தரம் மற்றும் சாதாரண தரப் பரீட்சைகளின் பெறுபேறுகளின் சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்வதற்காகப் பரீட்சைத் திணைக்களத்துக்குத் தினமும் 2 ஆயிரம் பேர் வருகை தருகின்றனர்.

பல்வேறு தேவைகளுக்காகப் பொதுமக்கள் தமது பரீட்சைச் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்வதற்குக் கொழும்பு பரீட்சைத் திணைக்களத்துக்கு வருகை தந்து அலைகின்றனர்.

அதனைக் கருத்தில் கொண்டு அனைத்துப் பரீட்சார்த்திகளின் கல்விப் பொதுத் தராதர உயர்தரம் மற்றும் சாதாரண தரப் பரீட்சைகளின் பெறுபேறுகளின் சான்றிதழ்களை இணையம் ஊடாக நாட்டின் பிரதம தபாலகங்களில் வழங்குவதற்கான நடவடிக்கையைக் கல்வி அமைச்சு எடுத்தது.

இந்தப் பணி எதிர்வரும் ஜூன் 6ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தொடக்கம் ஆரம்பிக்கப்படுகிறது.

பிரதம தபாலகத்தில் இந்தச் சேவைக்காக பிரத்தியேக அலுவலகர் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் பரீட்சைத் திணைக்களத்துடன் இணையம் ஊடாக உரியதரவுகளை வழங்கி கல்விப் பொதுத் தராதர உயர்தரம் மற்றும் சாதாரண தரப் பரீட்சைகளின் பெறுபேறுகளின் சான்றிதழ்களை பரீட்சாத்திகளுக்கு உடனடியாகப் பெற்றுக்கொடுப்பார் என்றும் கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார். (ஐ)

## நாளை

31.05.2019
வெள்ளிக்கிழமை

நட்சத்திரம்: அச்சுவினி பி.ப 12.02 வரை
திதி : துவாதசி பி.ப 4.50 வரை
இராகுகாலம் : 5.52 – 7.22
சுப நேரம் : 10.22 – 11.52

# அமைச்சர்கள் மலிக் – சாகல அமைச்சரவையில் சண்டை

## அலரி மாளிகை 'கச்சால்' என்று கிண்டலடித்த மைத்திரி

கொழும்பு, மே 30

முதலீட்டுச் சபையின் திட்டம் என்று இரும்புக் கைத்தொழிற்சாலை ஒன்றை அமைக்க துறைமுக அதிகார சபைக்குச் சொந்தமான திருகோணமலைக் காணி ஒன்றைத் தருமாறு அமைச்சர் மலிக் சமரவிக்ரம விடுத்த கோரிக்கையை துறைமுகங்கள் அமைச்சர் சாகல ரத்நாயக்க நேற்று முன்தினம் அமைச்சரவைக் கூட்டத்தில் நிராகரித்தார்.

இதனால் இரண்டு அமைச்சர்களுக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது. இதனைப் பார்த்துக் கொண்டிருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 'இது அலரிமாளிகை கச்சால்' என்று நகைப்புடன் கூறினார் என அறியமுடிந்தது.

முதலீட்டு நடவடிக்கைகள் குறைந்துள்ளதால் திருகோணமலைக் காணியை வழங்குமாறு அமைச்சர்களான சஜித் மற்றும் மங்கள ஆகியோரும் அமைச்சர் சாகலவிடம் வேண்டுகோள் விடுத்தனர்.



எவ்வாறாயினும் அமைச்சர் சாகல விடாப்பிடியாக நின்றதால் – அமைச்சர் மலிக்கின் அமைச்சரவைப் பத்திரத்திற்கு அமைச்சரவைக் கூட்டத்தில் அனுமதி கிடைக்கவில்லை. (ஐ)

# பயண எச்சரிக்கையை இந்தியாவும் தளர்த்தியது

கொழும்பு, மே 30

ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதலுக்குப் பின்னர் இலங்கை தொடர்பாக விடுக்கப்பட்டிருந்த பயண எச்சரிக்கையை இந்தியா தளர்த்தியுள்ளது.

புது டில்லியில் வெளியிட்ட அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் ஊரடங்கு உத்தரவு மற்றும் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டமை மற்றும் பாடசாலைகள் மீண்டும் திறக்கப்பட்டமை ஆகியவற்றால் இலங்கையின் பாதுகாப்பு நிலைமைகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

இருப்பினும் இலங்கைக்குப் பயணம் செய்யும் இந்தியர்கள் கவனமாகவும் அவதானத்துடனும் இருக்கவேண்டும் என்றும் எச்சரித்துள்ளது.

இலங்கையில் எந்தவொரு உதவி தேவைப்படினும் இந்தியர்கள், கொழும்பில் உள்ள தூதரகம் , கண்டி உள்ள உதவித் தூதரகம் அலுவலகம் மற்றும் யாழ்ப்பாணம் மற்றும் ஹம்பாந்தோட்டையில் உள்ள தூதரகங்கள் ஆகியவற்றுடன் தொடர்பை ஏற்படுத்த முடியும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

முன்னதாக சீனா, சுவிட்சர்லாந்து, ஜேர்மனி மற்றும் சுவீடன் ஆகிய நாடுகள் இலங்கை தொடர்பாக விடுக்கப்பட்டிருந்த பயண எச்சரிக்கைகளை தளர்த்தியிருந்தன. (ஐ)

# நீரில் மூழ்கி காணாமற்போன இளைஞனின் சடலம் மீட்பு!

மட்டக்களப்பு, மே 30

மட்டக்களப்பு வெல்லாவெளிப் பகுதியில் வாய்க்காலில் நீராடிய வேளையில், நீரில் அடித்துச்செல்லப்பட்ட இளைஞனின் சடலம் நேற்றுக் காலையில் மீட்கப்பட்டது.

வெல்லாவெளி 35ஆம் கிராமத்தில் உள்ள நவகிரி வாய்க்காலில் நேற்று முன்தினம் மாலை ஆறு இளைஞர்கள் நீராடியுள்ளனர். அப்போது திடீரென இளைஞன் ஒருவரை நீர் இழுத்துச் சென்றுள்ளதாக இளைஞர்கள் தெரிவித்ததைத் தொடர்ந்து, அப்பகுதி மக்கள் மற்றும் வெல்லாவெளிப் பொலிஸார் இணைந்து தேடுதல்களை மேற்கொண்டனர்.

விசாரணைகளை மேற்கொள்ள, நீராடிய ஏனைய இளைஞர்களை பொலிஸார் வெல்லாவெளி பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து சென்றனர். நேற்றுமுன்தினம் இரவு வரை தேடுதல்கள் மேற்கொள்ளப்பட்டும், மூழ்கிய இளைஞனை மீட்க முடியவில்லை.நேற்றுக் காலையில் தேடுதல் மேற்கொள்ளப்பட்டபோது, மூழ்கிய இளைஞனின் சடலம் மீட்கப்பட்டது.

களுவாஞ்சிக்குடி, குருமன்வெளி 12 பகுதியில் வசித்து வந்த சு.சந்திரகுமார் (வயது – 39) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். (ஐ)



# ஒரு பெண்ணுக்கு கருத்தடை செய்திருந்தாலும் தண்டனை

## அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவிப்பு



கொழும்பு, மே 30

சர்ச்சைக்குரிய குருநாகல் மருத்துவர் ஒரு பெண்ணுக்குக் கருத்தடை சத்திர சிகிச்சை செய்திருப்பது உறுதி செய்யப்பட்டால், அவருக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

குருநாகலில் பௌத்த மதப் பெண்களுக்கு சிசேரியன் சத்திர சிகிச்சையுடன் கருத்தடை சிகிச்சையையும் மேற்கொண்டார் என சந்தேகிக்கப்படும் மருத்துவர் தொடர்பில் தெரிவிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

கொழும்பில் நேற்று முன் தினம் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டின் போது ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்– மேற்படி மருத்துவர் கைது செய்யப்பட்டு அவருக்கு எதிராக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

குற்றம் நிரூபிக்கப்பட்டால் அவருக்குக் கடும் தண்டனையை பெற்றுக்கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்கும். எண்ணாயிரம் பேருக்கு அவர் கருத்தடைச் சிகிச்சையை செய்திருக்கவேண்டிய அவசியம் இல்லை. ஒருவருக்கு அவ்வாறு செய்திருந்தாலே அவருக்குத் தண்டனை உறுதி – என்றார். (ஐ)

# இராஜாங்க அமைச்சர் ஒருவரும் இரு அமைச்சர்களும் நியமனம்

கொழும்பு, மே 30

புதிய அமைச்சர்கள் இருவரும் இராஜாங்க அமைச்சர் ஒருவரும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் நேற்று முற்பகல் பதவியேற்றனர்.

ஐக்கிய தேசிய முன்னணியின் ரஞ்சித் மத்தும பண்டார, பொது நிர்வாகம், இடர் முகாமைத்துவம் மற்றும் கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சராகவும் பி.ஹரிசன் விவசாய, கால்நடைகள் வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், மீன்பிடி மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சராகவும் பதவியேற்றனர்.

அத்துடன் ஐக்கிய தேசிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் வசந்த சேனாநாயக்க, வெளிநாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சராகப் பதவியேற்றார்.

# மாணவனின் உயிரிழப்புக்கு காரணம் முட்டையில் தொற்றிய பக்றீரியாவா?

## குருதி மாதிரி கொழும்புக்கு அனுப்பப்படுகிறது

யாழ்ப்பாணம், மே 30

யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி மாணவனின் உயிரிழப்பின் காரணத்தைக் கண்டறிய அவரது குருதி மாதிரி கொழும்புக்கு அனுப்பிவைக்கப்படுகிறது என்று யாழ்ப்பாணம் சுகாதாரத் துறையினர் தெரிவித்தனர்.

அத்துடன் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் அவரது சகோதரர்கள் இருவரும் ஆரோக்கியமான நிலையில் உள்ளனர் என தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரியில் தரம் 2இல் பயிலும் சத்தியகரன் அபிகரன் (வயது – 7) என்ற மாணவனே இவ்வாறு உயிரிழந்தார்.

கோப்பாயைச் சேர்ந்த மாணவனும் அவரது சகோதரர்கள் இருவரும் வயிற்றோட்டம் காரணமாக கடந்த 10ஆம் திகதி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் கிசிச்சைக்காகச் சேர்க்கப்பட்டனர். சுமார் 17 நாள்களாக வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் 7 வயது மாணவன் நேற்று முன்தினம் காலை உயிரிழந்தார் என்று மருத்துவர்களால் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை சட்ட மருத்துவ நிபுணரால் மாணவனின் சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

மாணவன் இரண்டு வாரங்களுக்கு மேலாக வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தார். அவருக்கு அதிகளவான சேலைன் ஏற்றப்பட்டது. அதனால் அவருக்கு ஏற்பட்ட கிருமித் தொற்றுத் தொடர்பில் துல்லியமான முடிவை உடற்கூற்றுப் பரிசோதனையின் ஊடாகக் கண்டறிய முடியாது.

அவரது குருதி மாதிரியை ஆய்வுக்குட்படுத்தப்படும்போது கிருமியின் தாக்கம் தொடர்பில் கண்டறிய முடியும் என்று உடற்கூற்றுப் பரிசோதனையின் மூலம் தெரிவிக்கப்பட்டது.

மாணவனும் அவரது சகோதரர்களும் உட்கொண்ட முட்டையில் விஷக் கிருமியின் தாக்கம் உள்ளது. அதனால் உணவு ஒவ்வாமை ஏற்பட்டு சுகயீனத்துக்குள்ளாகினர் என்று தெரிவிக்கப்பட்டது.

கோழியின் எச்சங்களில் சல்மனெல்ல பக்றீரியா (salmonella bacteria) உருவாகும்.

அந்த பக்றீரியா முட்டைக் கோதில் தொற்றுவதற்கு வாய்ப்பிருக்கிறது. முட்டைக் கோது அகற்றப்படும்போது பக்றீரியா முட்டையில் சேர்வதனால் உணவில் அதன் தாக்கம் ஏற்படும் வாய்ப்பிருக்கிறது.

அந்தத் தொற்று மாணவனுக்கு ஏற்பட்டதா என்பது தொடர்பில் அவரது குருதி மாதிரி கொழும்புக்கு அனுப்பிவைக்கப்படுகிறது என்று சுகாதாரத் துறையினர் தெரிவித்தனர். (ஐ)

## றமழான் நற்சிந்தனைகள்



புனித றமழான் இறுதிப்பத்தில் தஹஜ்ஜத் தொழுகை இஃதிகாப் பள்ளியில் தரித்திருத்தல், பாவ மன்னிப்பு வேண்டல், லைலதுல் கத்ர் இரவைத் தேடல் ஆகியவை நிறைவேறபாதுகாப்பையும் அருளையும் தந்தருள்வாயாக ஆமீன்.


நோன்பு திறக்கும் நேரம்
மாலை 6.22
ஸஹர் முடிவு அதிகாலை 4.17
(எம்.எல்.லாபிர்)

# காங்கிரஸ் மீண்டும் எழுச்சி பெறும் ராஜினாமா முடிவை கைவிடுங்கள்!

## ராகுல் காந்தியிடம் ஷீலா தீட்சித் கோரிக்கை

புதுடில்லி,மே30

காங்கிரஸ் கட்சித் தலைவர் பதவியை உராஜினாமாச் செய்யும் முடிவை ராகுல் காந்தி திரும்பப் பெற வேண்டும் என அக்கட்சியின் மூத்த தலைவரான ஷீலா தீட்சித் வலியுறுத்தியுள்ளார்.


© Shekhar Yadav

நடைபெற்று முடிந்த மக்களவைத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி 400 க்கும் அதிகமான இடங்களில் போட்டியிட்டது. ஆனால் 52 இடங்களில் மட்டுமே அக்கட்சி வெற்றி பெற்றது. கடந்த முறை போல இம்முறையும் காங்கிரஸ் கட்சியால் எதிர்க் கட்சி அந்தஸ்தக் கூடப் பெற முடியாமல் போனது.

இந்தப் படுதோல்விக்குப் பொறுப்பேற்று கட்சித் தலைவர் பதவியை ராஜினாமாச் செய்யும் முடிவை ராகுல் காந்தி எடுத்திருக்கிறார் எனத் தெரிகிறது.

அவர் தனது முடிவில் உறுதியாக இருக்கிறார் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. எனினும் கட்சியின் மூத்த தலைவர்கள் அவரைச் சமாதானம் செய்யும் முயற்சியில் தொடர்ந்து ஈடுபட்டுள்ளனர்.

ராகுல் காந்தி இராஜினாமா செய்யக் கூடாது எனப்பல்வேறு தரப்பினரும் வலியுறுத்தியுள்ளனர். இந்த பட்டியலில் தி.மு.க. தலைவர் ஸ்டாலின், நடிகர் ரஜினிகாந்த் உள்ளிட்டோரும் அடங்குவர்.

இந்நிலையில் தான் ராகுல் காந்தி தனது இராஜினாமா முடிவைத் திரும்பப் பெற வேண்டும் என ஷீலா தீட்சித் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

1977 ஆம் ஆண்டு காங்கிரஸ்கட்சிசரிவில் இருந்து மீண்டு, மக்களவைத் தேர்தலில் மிகப் பெரிய வெற்றியைப் பெற் றது. சுமார் 2 ஆண்டு இடைவெளிக்கு பின்னர் இந்திரா காந்தி தலைமையில் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றி நீண்ட காலம் ஆட்சி நடத்தியுள்ளது என அவர் நினைவு கூர்ந்துள்ளார்.

தற்போது அது போல மீண்டும் காங்கிரஸ் கட்சியால் எழுச்சி பெற முடியும். எனவே ராகுல் காந்தி தனது இராஜினாமா முடிவைத் திரும்பப் பெற வேண்டும் என அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ராகுல் காந்திக்கு டெல்லி மாநில காங்கிரஸ் எப்போதும் உறுதுணையாக நிற்கும்.

தற்போதைய மக்களவைத் தேர்தல் தோல்வியால் காங்கிரஸின் தலைவரும், கட்சியின் தொண்டர்களும் மனம் உடைந்து போகத் தேவை இல்லை. அடுத்து வரும் டெல்லி சட்டப்பேரவைத் தேர்தலில், காங்கிரஸ் ஆட்சியை பிடிக்கும். எனவே தொண்டர்கள் மக்களிடம் சென்று அவர்களது நம்பிக்கையை பெறும் முயற்சியில் ஈடுபட வேண்டும் என ஷீலா தீட்சித் வலியுறுத்தியுள்ளார்.

(உ)

# நாணயக் கண்காணிப்பில் இருந்து இந்திய ரூபாவை நீக்கியது அமெ.

வொஷிங்டன், மே 30

அமெரிக்காவின் நாணய கண்காணிப்பு பட்டியலில் இருந்து இந்தியா, சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகள் நீக்கப்பட்டுள்ளன.

அமெரிக்காவின் திறைசேரி உலகம் முழுக்க உள்ள சில முக்கிய நாணயங்களை கண்காணிப்பு பட்டியலில் வைத்துள்ளது. அதன்படி எந்தநாட்டு நாணயம் எல்லாம் உலகில் மிகமுக்கியமானதாக்கத்தை ஏற்படுத்துகின்றனவோ அவை மட்டுமே இந்த வரிசைப் பட்டியலில் வைக்கப்பட்டுஇருக்கும்.



அந்த நாணயத்தின் சர்வதேச மதிப்பை,தாக்கத்தை வைத்து இந்தப் பட்டியலில் அது சேர்க்கப்படும். அந்த வகையில் சீனா, ஜேர்மனி, ஜப்பான், தென்கொரியா,சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளின் பணம் அமெரிக்காவின் இந்தப் பட்டியலில் உள்ளது. இந்திய ரூபாயும் இந்தப் பட்டியலில் இருந்து வந்தது.

ஆனால்,அமெரிக்காவின் சில முக்கியசிரத்தைகளுக்குத் தீர்வு கொடுக்கும் வகையில் இந்தியா மேற்கொண்ட நடவடிக்கைகள் அமைந்துஇருக்கின்றமையையடுத்து, நாணய கண்காணிப்புப் பட்டியலில் இருந்து இந்திய ரூபா நீக்கப்பட்டு இருப்பதாக, அமெரிக்கத் திறைசேரி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

40 பக்கங்கள் கொண்ட அந்த அறிக்கையில், சுவிட்சர்லாந்தும் நாணயமும் கண்காணிப்பு பட்டியலில் இருந்துநீக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேவேளையில், சீனா, ஜப்பான், தென்கொரியா, இத்தாலி, ஜேர்மனி, அயர்லாந்து, சிங்கப்பூர், மலேசியா, வியட்நாம்ஆகிய நாடுகளைநாணய கண்காணிப்பு பட்டியலில் தொடர்ந்து அமெரிக்கா வைத்துள்ளது

# 94 வீதமான எம்.எல்.ஏக்கள் ஆந்திராவில் கோடீஸ்வரராம்

அமராவதி,மே30



ஆந்திர சட்டப்பேரவைக்குப் புதிதாகத் தேர்வு செய்யப்பட்ட எம்.எல்.ஏ.க்களில் 94 சதவீதம் பேர் கோடீஸ்வரர்கள் என்பது தெரிய வந்துள்ளது.

ஆந்திர சட்டப்பேரவை தேர்தலில், தெலுங்கு தேச கட்சியின் தலைவரான முதல் மந்திரி சந்திரபாபு நாயுடுவை வீழ்த்தி, ஜெகன்மோகன் ரெட்டி தலைமையிலான வை.எஸ்.ஆர். காங்கிரஸ் அபார வெற்றி பெற்று ஆட்சியை பிடித்துள்ளது. அக்கட்சி மொத்தமுள்ள 175 தொகுதிகளில் 151 இடங்களைக் கைப்பற்றியது.

இதையடுத்து, ஆந்திர முதலமைச்சராக ஜெகன் மோகன் ரெட்டி இன்று பதவியேற்க உள்ளார். இந்த நிலையில் ஆந்திர சட்டப்பேரவைக்கு புதிதாக தேர்வு செய்யப்பட்ட எம்.எல்.ஏ.க்களில் 94 சதவீதம் பேர் கோடீஸ்வரர்கள் என்பது தெரிய வந்துள்ளது.

மொத்தம் தேர்வான174 எம்.எல்.ஏ.க்களில் 163 பேர் கோடீஸ்வரர்களாக இருக்கின்றனர் என்று ஜனநாயகச் சீர்திருத்தச் சங்கம் என்ற அமைப்பு தெரிவித்துள்ளது. அதிலும் பெரும்பாலானவர்கள் ஜெகன்மோகன் ரெட்டியின் வை.எஸ்.ஆர். காங்கிரஸ் கட்சியை சேர்ந்தவர்கள்.

சராசரியாக ஒரு எம்.எல்.ஏ.வுக்கு 27 கோடியே 87 லட்சம் ரூபா மதிப்பிலான சொத்துக்கள் உள்ளன. அதில் 668 கோடி ரூபா சொத்துக்களுடன் முன்னாள் முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு முதலிடத்திலும், 510 கோடி ரூபா சொத்துக்களுடன் முதலமைச்சராகப் பொறுப்பேற்க இருக்கும் ஜெகன் மோகன் ரெட்டி 2 ஆவது இடத்திலும் உள்ளனர் எனப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

# ஜம்மு இராணுவத் தளத்தைப் படம் பிடித்து பாக். அனுப்பிய இரு உளவாளிகள் கைது

ஜம்மு,மே 30



இந்தியாவின் ஜம்மு காஷ்மீரில் இராணுவ தளம் ஒன்றை வீடியோப் பதிவு செய்த 2 பேரை பொலிஸார் கைது செய்தனர். அவர்கள் பாகிஸ்தான் உளவாளிகளா என்ற கோணத்தில் பொலிஸார் விசாரித்து வருகின்றனர்.

ஜம்மு காஷ்மீர் மாநிலத்தின் ஜம்முவில் உள்ள ரத்னுசக் பகுதியில் உள்ள இராணுவ முகாம் அருகே சுற்றி திரிந்த இருவர் முகாமை வீடியோ பதிவு செய்து கொண்டிருந்தனர். இதைக்கண்ட இராணுவ அதிகாரிகள் அவர்களைப் பிடித்து விசாரித்தனர். அவர்களிடம் இருந்த வீடியோ கமராவை பரிசோதனை செய்தனர். அதில், இராணுவ முகாம் குறித்த விவரங்கள், வீடியோ காட்சிகளை பாகிஸ்தானிற்கு அனுப்பியமை தெரிய வந்தது.

இதைத்தொடர்ந்து அவர்களை உள்ளூர் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர் ராணுவ அதிகாரிகள். அவர்களைக் கைது செய்த பொலிஸார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# மோடியின் புதிய அரசு இ ன்று பதவியேற்பு பாகிஸ்தான் பிரதமருக்கு அழைப்பு இல்லை



இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்ற நரேந்திர மோடி மீண்டும் இன்று பிரதமராகப் பதவி ஏற்கிறார். இந்த பதவியேற்பு விழாவில் பங்குபற்ற பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கானுக்கு அழைப்பு அனுப்பப்படவில்லை.

உள்நாட்டு அரசியல் சூழ் நிலையில் மோடி பதவியேற்பு விழாவில் பங்கேற்குமாறு பிரதமர் இம்ரான்கானுக்கு அழைப்பிதழ் அனுப்ப முடியாத நிலை உள்ளதாக பாகிஸ்தான் வெளி யுறவு துறை மந்திரி ஷா முகமது குரோஷி தெரிவித்துள்ளார்.

இந்த விழாவில் வங்காள தேசம், மியன்மார், இலங்கை, தாய்லாந்து, நோபளம், பூட்டான், கிர்கிஸ்தான், மொரீசியஸ் உள்ளிட்ட 14 நாட்டு தலைவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஆனால் அண்டை நாடான பாகிஸ்தானுக்கு அழைப்பு அனுப்பப்படவில்லை. இது குறித்து பாகிஸ்தான் வெளியுறவு துறை மந்திரி ஷா முகமது குரோஷி இஸ்லாமாபாத்தில் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியவை வருமாறு:-

நாடாளுமன்ற தேர்தலின் போது பாரதீய ஜனதாக் கட்சியின் தேர்தல் பிரசாரம் முழுவதும் பாகிஸ்தானை அடிப்படையாக கொண்டே நடைபெற்றது. இத்தகைய உள்நாட்டு அரசியல் சூழ் நிலையில் மோடி பதவியேற்பு விழாவில் பங்கேற்குமாறு பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கானுக்கு அழைப்பிதழ் அனுப்ப முடியாத நிலை உள்ளது.

இது எதிர்பாராதது. இத்தகைய பிரச்சினையில் இருந்து இந்தியா விரைவில் விடுபடும். இந்தியாவும் பாகிஸ்தானும் பரஸ்பர நட்புறவுடன் திகழ வேண்டும் எனப்பிரதமர் இம்ரான்கான் விரும்புகிறார்.

எனவேதான் நாடாளுமன்றத் தேர்தலில் அமோக வெற்றி பெற்ற பாரதீய ஜனதா கட்சிக்கு அவர்வாழ்த்து தெரிவித்தார்.

இப்பிராந்தியம் வளர்ச்சி பெற காஷ்மீர், சியாசின் மற்றும் சர்கிரீக் உள்ளிட்ட முக்கிய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண பிரதமர் மோடி பேச்சு நடத்த வேண்டும். இதன் மூலம் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும். - இவ்வாறு அவர் தெரிவித்தார்.

கடந்த தடவை - முதல் முறையாக - 2014 இல் நரேந்திர மோடி பிரதமராகப் பதவியேற்ற போது அந்நிகழ்வில் அப்போதைய பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் பங்குபற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.

(உ)

# தமிழ் மாற்றுத் திறனாளிகளின் சுயமதிப்பீடு மாநாடு ஜூன் 16!

யாழ்ப்பாணம், மே 30

தமிழ் மாற்றுத் திறனாளிகள் அமைப்பும்யாழ்ப்பாணம்றோட்ரிக் கழகமும் இணைந்து நடத்தும் சுய மதிப்பீடு மாநாடு எதிர்வரும் ஜுன் 14ஆம்திகதி யாழ்ப்பாணம் ரில்கோ ஹோட்டலில் நடைபெறவுள்ளது.




இது தொடர்பாக விளக்கமளிக் கும் ஊடக மாநாடொன்று நேற்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது. அந்த மாநாட்டில் ஊடக அறிக்கை ஒன்றைத் தமிழ் மாற்றுத் திறனா ளிகள் அமைப்பு வெளியிட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

பாதிக்கப்பட்டோரும், பாதிக்கப்பட்டோ ரோடு பயணிப்போரும் இணைந்து பாதிக்கப்பட்டோரின் வாழ்வும், பயனும் குறித்து சுயமதிப்பீடு செய்யும் நோக்கோடு மாநாடு ஒன்றை றோட்டரிக் கழகம், யாழ்ப்பாணம்தமிழ்மாற்றுத்திறனாளிகள் அமைப்பு இணைந்து ஏற்பாடு செய்கின் றன.




இலங்கைத் தீவின் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் போரினால் பெரிதும் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் வாழ்கின்ற பாதிக்கப்பட்டவர்கள் இதுவரை காலமும் சந்தித்தவையும், சாதித்தவையும் ஆரா யப்படுவதோடு இனிவருங்காலங்களில் அவர்களது வாழ்வுப்பயணம் குறித்தான புரிதல் ஒன்றை ஏற்படுத்துவதும் இந்த மாநாட்டின் முக்கிய நோக்கமாக இருக்கும்.

பாதிக்கப்பட்டோரை பின்வரும் நான்கு பிரிவுகளாக வகுத்து இந்த மாநாடு ஆராய விளைகின்றது.

1.மாற்றுத்திறனாளிகள்.
2.பெற்றோரை இழந்த குழந்தைகள்.
3.பிள்ளைகளை இழந்த பெற்றோர்கள்.
4.பெண் தலைமைத்துவக் குடும்பங்கள்.

பாதிக்கப்பட்டோர் தாமும் பெருமுயற் சியை எடுத்து வாழ்வில் எதிர் நீச்சல் போட்டு வாழ்ந்து வரும் இந்த நிலையில் அவர்களோடு பயணித்து அவர்களின் வாழ்வை இயல்பு நிலைக்குக் கொண்டு வருவதற்காகப் பாடுபடும் பலர் நம்மோடு பயணிக்கின்றார்கள். குறிப்பாக,

1.அரச திணைக்களம்
2.மக்கள் பிரதிநிதிகள்
3.இலங்கையைத் தளமாகக் கொண் டியங்குகின்ற தொண்டு நிறுவனங்கள்
4.சர்வதேச தொண்டு நிறுவனங்கள்

ஆகியோரோடு கடல் கடந்து வாழ்கின்ற போதிலும் எம்மோடு பல்வேறுவகைகளில் பயணிக்கின்ற புலம்பெயர் மக்களின் பேரன்பும் பேருதவியும் பாதிக்கப்பட்டோரை நோக்கி வந்த வண்ணம் இருக்கின்றமை பெரும் ஆறுதலான ஒரு விடயம்.

அவ்வாறு பயணிப்போரின் செயற் பாடுகள் பாதிக்கப்பட்டோரின் வாழ்வில் பெரிய நல்ல மாற்றம் முதல் குறிப்பிடத்தக்க மாற்றம் வரையிலான ஒரு தாக்கத்தை ஏற்ப டுத்தியிருக்கின்றன என்பது உண்மை.

அதேவேளை உதவி களைப் பெற்றுக் கொள் ளும் வலையமைப்புக் களிற்குள் இன்னமும் உள்வாங்கப்படாமல் மருந்துக்கும் வழி யின்றி, உணவிற்கும் போராடிவாழ்கின்றபலர் எமக்குள்ளேதான் இருக் கின்றார்கள். குறிப்பாக பாதிக்கப்பட் டோரை பெற்றோராகக் கொண்ட பிள்ளைகள் கல்வி கற்கும் நிலை யில் இருந்தும் கல்வி கற்கும் வாய்ப்பை இழந்து சிறுவயதிலேயே தொழில் தேடி அவர்களின் குடும்பத்திற்காக உழைக்கின்ற பெரும் துர்ப்பாக்கியம் எமது சமூ கத்துக்குள்ளேயே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

பாதிக்கப்பட்டோரின் பலதேவை கள் இன்னும் பூர்த்தி செய்யப்ப டாமலேயே இருக்கின்றன. குறிப் பாக மாற்றுத்திறனாளிகளின் அணுகும் வசதி இன்னமும் எட்டாக்கனியாகவே இருந்து வருகின்றது.

இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களுக்கு இருக்கின்ற உண்மையான, நேர்மை யான, இலகுவில் தீர்த்துவைக்கக்கூடிய பல தேவைப்பாடுகள் குறித்தான சரியான புரிதல் ஒன்றை ஏற்படுத்துவது இன்றைய காலத்தின் ஒரு சாத்தியப்பாடான தேவை யாக இருக்கின்றது. போர் முடிந்து பத்து வருடங்களில் பல்வேறு நலத்திட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன இந்த வேளையில் பல அடிப்படைத் தேவைகள் குறித்தான சரியான புரிதல் இருந்தால் இன்னமும் சிறப்பாக இருக்கும் என்கின்ற ஒரே நோக்கத்தில் இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது.

பாதிக்கப்பட்டோரின் வாழ்வை நிர்ண யிக்கும் சக்தி படைத்தவர்கள், அதிகாரத் தில் உள்ளவர்கள், ஆற்றல்- ஆர்வம் உள் ளவர்களில் பெரும்பாலானோர் இந்த மாநாட்டுக்கு அழைக்கப்பட்டிருக்கின் றனர்.

1.ஆளுநர்
2.அரசஉயர்அதிகாரிகள்.
3.அரசஅதிபர்கள், மக்கள் பிரதிநிதி களில் ஒரு சிலர்-

- இந்த மாநாட்டிற்கு அழைக்கப்ப டுகின்றார்கள். அத்தோடு வடக்கு- கிழக்கு மாகாணங்களில் பாதிக்கப்பட்டோரை பிரதிநிதித்துவப்படுத்தும்அமைப்புக்களின் பிரதிநிதிகள் இந்த மாநாட்டிற்கு அழைக் கப்படுகின்றார்கள்.

இந்தமாநாட்டில்பாதிக்கப்பட்டோர்களை வகைப்படுத்தி, அவர்களுக்கிடையே குழு நிலைவிவாதங்களைநடத்தி, அவர்களின் தேவைகளையும் அவர்களின் அபிலா ஷைகளையும் அவர்கள் கேட்டு நிற்பதை யும் வெளிக்கொண்டு வரும் பிரகடனமும் இந்த மாநாட்டின் இறுதியில் வெளி யிடப்படும். அவ்வாறு வெளியிடப்படும் கோரிக்கைகள் பகிரங்கப்படுத்தப்பட்டு அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சிகளை அனைவரும் இணைந்து மேற்கொள்ளவேண்டும் என்ற பேரவா வோடு இந்த மாநாட்டை நடத்த விழை கின்றோம்.

இந்த மாநாட்டின் இருக்கைகள் மட் டுப்படுத்தப்பட்டவை. மாநாட்டிக்கு நாங்கள் அழைக்கத் தவறிய அமைப்புக்களின் பிரதிநிதிகள் எம்மை அணுகலாம். இருக் கைகளின் இருப்புக்களின் எண்ணிக் கையில் அவர்கள் உள்வாங்கப்படுவார் கள். இம்முறை இந்த மாநாடு ஒரு ஆரம்ப நிகழ்வாக நடைபெறும்.

இனிவருங் காலங்களில் அரச அதி காரிகள், மக்கள் பிரதிநிதிகள், பாதிக்கப் பட்டோர், புலம்பெயர் நாட்டில் எமக்காக உழைக்கின்றவர்களின் பிரதிநிதிகள் அனைவரும் இணைந்து மிகப்பெரும் மாநாடுகளாக நடத்தப்பட்டு, அதன்மூலம் பாதிக்கப்பட்டோரின் தேவைகள் குறித் தான சரியான புரிதல் உருவாக்கப்பட்டு, பாதிக்கப்பட்டோரின் வாழ்க்கையில் நல்ல மாற்றம் உருவாக வேண்டும்.-என்றுள் ளது. (ஐ-07)

---

# பிரேசில் சிறைக் கலவரம் மற்றைய சிறைகளுக்கும்!

## இதுவரை நாற்பது கைதிகள் உயிரிழப்பு

ரியோ டி ஜெனரோ,மே30

பிரேசிலின் மனாவுசில் சிறையில் ஏற்பட்ட கலவரம் மற்றைய சிறைகளுக்கும் பரவியதில் 40 கைதிகள் உயிரிழந்தனர்.

பிரேசில் உலகிலேயே அதிக சிறைக் கைதிகளை கொண்ட 3 ஆவது நாடாகத் திகழ்கிறது. கடந்த ஏப்ரல் மாதக் கணக்கெடுப்பின்படி அந்நாட்டில் ஒரு லட்சத்து 12ஆயிரத்து 305 கைதிகள் இருக்கிறார்கள். இத



னால் அங்குள்ள சிறைகளில் நிர்ண யிக்கப்பட்ட அளவை விட இருமடங்கு அதி கமான கைதிகள் அடைத்து வைக்கப் பட்டுள்ளனர்.

இதன் காரண மாக பிரேசில் சிறை களில் கைதிகளுக்கு இடையே வன்முறை மற்றும் கலவரங்கள் மூள்வதும், சிறை யைத்தகர்த்துத்தப்பி ஓடும் முயற்சிகளும் அவ்வப்போது நடக் கின்றன.

இந்த நிலையில், அந்நாட்டின் வடக்கு பகுதியில் அமைந்துள்ள அமேசோனஸ் மாகாணத்தின் தலை நகர் மனாவுசில் உள்ள சிறையில் திங்களன்று கைதி களுக்கு இடையே பெரும் கலவரம் வெடித்தது. இதில் 15 கைதிகள் பலியாகினர்.

இந்நிலையில், அங்குள்ள மேலும் 4 சிறைகளில் ஏற்பட்ட மோதலில் 40 கைதிகள் பலியாகினர். இதை யடுத்து, சிறைகளில் பாதுகாப்பை பலப்படுத்த பிரே சிலின் மைய அரசு கூடுதல் படைகளை அனுப்பி வைத்துள்ளது.

---

# அமெரிக்காவைத் தொடர்ந்து தாக்கும் சூறாவளி அனர்த்தம்



அமெரிக்காவின் கன்சாஸ் மாகாணத்தில், அடுத்தடுத்து சூறா வளிக்காற்றில் வீசியதில் வீடுகள் பலத்த சேதமடைந்தன.


கன்சாஸ் மாகாணத்தில் உள்ள நகரங்களில் செவ்வாய் மாலை கனமழையுடன் சூறாவளிக்காற்று வீசியது. இதில் வீடுகள் பல தரை மட்டமாகின, மரங்கள் வேரோடு சாய்ந்தன. இதில் உயிர்சேதம் எதுவுமில்லை என தெரிவித்துள்ள தேசிய வானிலை சேவை மையம் எனினும் சூறாவளிக்காற்று தொடர்ந்து வீச வாய்ப்புள் ளதால் மக்களைப் பாது காப்பாக இருக்கும்படி அறிவுறுத்தியுள்ளது.

முன்னதாக ஒக் லாமா மாகாணத்தில் வீசிய சூறாவளிக் காற்றில், ஒஹையோவின் (hio) மேற்கு பகுதியில் உள்ள வீடுகள் பலத்த சேதமடைந்த மையோடு, ஒருவர் உயிரிழந்தமை குறிப்பி டத்தக்கது. (உ)

---

# புடினின் இரகசியக் காதலிக்கு இரட்டை ஆண் குழந்தைகள்!

ரஷ்ய அதிபர் விளாதிமீர் புடி னின் இரகசியக் காதலி என்று கூறப் படும் ஒலிம்பிக் தங்கம் வென்ற ஜிம்னாஸ்டிக் வீராங்கனை அலினா காபேவாவுக்கு இரட்டைக் குழந்தை கள் பிறந்துள்ளன.



36 வயதான அலினா நீண்ட காலமாக தம்மை விட 30 வயது அதிகமான புடினுடன் இரகசிய உறவு கொண்டிருக்கிறார் எனப் பத்திரிகைகள் எழுதி வருகின்றன. ஆனால் இந்தத்தகவல்களை புடின் மறுத்து வந்துள்ளார்.

இந்நிலையில் மொஸ்கோவில் உள்ள ஒரு மருத்துவமனையின் ஒரு மாடி முழுவதும் காலி செய் யப்பட்டு அங்கு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட அலினாவுக்கு இரட்டை ஆண் குழந்தைகள் பிறந் துள்ளன.

---

# 52 கோடி இந்திய ரூபாவுக்கு ஏலம்போன விசித்திர வைரம்



ஹொங்கொங்கில் நடந்த ஏலத் தில் சிறப்பு வண்ணம் கொண்ட வைரம் ஒன்று இந்திய மதிப்பில் சுமார் 52 கோடி ரூபாவுக்கு ஏலம் போனது.

பபிள்கம் பிங்க் என்ற சிறப்பு நிறம் கொண்ட இந்த வைரம் ஹொங்கொங் நகரத்தில் ஏலம் விடப்பட்டது. 3.43 கரட் எடை கொண்ட அந்த வைரத்தை புகழ் பெற்ற கிறிஸ்டீஸ் ஆசியா நிறுவ னம் ஏலம் விட்டது. இந்த ஏலத்தில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த ஏராளமானோர் பங்கேற்றனர்.

இறுதியில் இந்த வைரத்தை மத்திய ஆபிரிக்காவைச் சேர்ந்த பிராங்கோயிஸ் குரியல் என்பவர் இந்திய மதிப்பில் 53.23 கோடி ரூபாவுக்கு ஏலம் எடுத்தார்.

இதுபோன்ற விசித்திர வண் ணம் கொண்ட வைரத்தைத் தான் பார்த்ததில்லை என்று கூறிய பிராங் கோயிஸ், குறிப்பிட்ட வைரத்திற்கு இன்னும் அதிகம் விலை கொடுத்தி ருக்கலாம் என்றும் தெரிவித்தார்.



# பாதுகாப்பு ஒப்பந்தம்: சீனாவுடன் செய்யலாம்! அமெரிக்காவுடன் கூடாதா?

## மேற்குலக தூதரக இராஜதந்திரிகள் விசனத்துடன் வினா

சீனா – இலங்கை பாதுகாப்பு ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ள விடயங்கள் முழுமையாக வெளிப்படுத்தப்படவில்லையெனக் கொழும்பில் உள்ள மேற்குலக நாடுகள் மற்றும் இந்தியா,ஜப்பான் ஆகிய நாடுகளின் தூதுவர்கள் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தின் மூத்த அமைச்சர்களிடம் அதிருப்தி வெளியிட்டுள்ளனர். அமெரிக்கா, இந்தியா ஆகிய நாடுகளுடன் செய்யப்படுகின்ற ஒப்பந்தங்களின் பிரதிகள் இலங்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவது வழமை. குறிப்பாக ஜே.வி.பி. அந்த விடயத்தில் கடும்பிடியாகவே இருக்கும். ஆனால் சீனாவுடன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன செய்து கொண்ட ஒப்பந்தம் குறித்து ஜே.வி.பியோ, மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான கூட்டு எதிர்க்கட்சியோ இதுவரை கேள்வி எழுப்பவில்லை. பதுகாப்பு ஒப்பந்தத்தின் பிரதியைக் கூட நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு கோரவுமில்லை.

இது தொடர்பான தனது சந்தேகத்தை கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரக இராஜதந்திரி ஒருவர் கேட்டாரெனபெயர் குறிப்பிட விரும்பாத அமைச்சர் ஒருவர் கூர்மைச் செய்தித் தளத்திற்குத் தெரிவித்தார்.

சீன – இலங்கைப் பாதுகாப்பு ஒப்பந்தம் தொடர்பாகக் கேள்வி எழுப்பாத சிங்கள அரசியல் கட்சிகள், பௌத்த மகாநாயகத் தேரர்களின் எதற்காக அமெரிக்காவுடன் செய்யப்படவுள்ள பாதுகாப்பு ஒப்பந்தம் குறித்துச் சந்தேகிக்கின்ற



னர் என்பது தொடர்பாக அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் விசனமடைந்துள்ளனர்.

அடிப்படையில் சீனாவுடனான உறவைப் பிரதான சிங்களக் கடும்போக்குக் கட்சிகள் விரும்புகின்றன என ஒப்பாசாரத்துக் காகவே அமெரிக்காவுடனான இராஜதந்திர உறவை அவை பேணுகின்றன என அமெரிக்க இராஜதந்திரி நாசூக்காகவும் கடும் தொனியிலும் கூறினார் என்றும் அந்த அமைச்சர் தெரிவித்தார்.

அமெரிக்காவுடன் செய்யவுள்ள பாதுகாப்பு ஒப்பந்தம் தொடர்பாகக் கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதுவர் அலைனா டெப்லிட்ஸ் சென்ற வியாழக்கிழமை கண்டிக்குச் சென்று மகாநாயக்க தேரர்களுக்கு விளக்கமளித்துள்ளார்.

இலங்கையின் இறைமைக்கும் இலங்கையின் ஒற்றையாட்சித் தன்மைக்கும் பாதிப்பு ஏற்படாதெனவும் அமெரிக்கத் தூதுவர் பௌத்த மகாநாயக்க தேரர்களிடம் உறுதியளித்துமிருந்தார்.

இந்த நிலையில், சீன – இலங்கைப் பாதுகாப்பு ஒப்பந்தம் தொடர்பாகக் கேள்வி எழுப்பாத சிங்கள அரசியல் கட்சிகள், பௌத்த மகாநாயக்க தேரர்கள் எதற்காக அமெரிக்காவுடன் செய்யப்படவுள்ள பாதுகாப்பு ஒப்பந்தம் குறித்துச் சந்தேகிக்கின்றனர் என்பது தொடர்பாக அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் விசனமடைந்துள்ளனர்.

மகாநாயக தேரர்களின் கடும் எதிர்ப்பினாலேயே மைத்திரிபால சிறிசேன அமெரிக்காவுடனான ஒப்பந்தத்தை எதிர்க்கிறார் எனஅமெரிக்கத் தூதரகம் கருதுகின்றது. ஆனாலும் தங்களுடன் நெருக்கமாகச் செயற்படும் கோட்டாபய ராஜபக்ஷவும் அவருடைய சகோதரரான மஹிந்த ராஜபக்ஷவின் அரசியல் அணியும் ஏன் இந்த விடயத்தில் மௌனமாக இருக்கின்றன என்பது தொடர்பாகவும் அமெரிக்கத் தூதரகம் சந்தேகம் எழுப்பியுள்ளது.

எனினும், இந்தச் சந்தேகங்களின் மத்தியிலும் இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள்பாதுகாப்புச்செயலாளர்கோட்டாபய ராஜபக்ஷ உள்ளிட்ட குழுவினருடன் கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதுவர் அலைனா டெப்லிட்ஸ் தொடர்ச்சியாகப் பேசி வருவருகின்றார்.

கோட்டாபய ராஜபக்ஷ அமெரிக்கப் பென்ரகனோடு கூடுதல் உறவுகளைக் கொண்டுள்ளார். மஹிந்த ராஜபக்ஷவை மையப்படுத்திய கூட்டு எதிர்க் கட்சியின் சார்பில் – அதாவது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் சார்பில் அவர் ஜனாதிபதித் தேர்தலிலும் போட்டியிடவுள்ளார். அதற்கு அமெரிக்காவும் தற்போதைக்கு மறைமுக ஆதரவு வழங்கியுமுள்ளது.

எனவே மஹிந்தவுடன் கூட்டுச் சேர்ந்துள்ள மைத்திரிபால சிறிசேன எதற்காக இலங்கையுடன் செய்யப் படவுள்ள பாதுகாப்பு ஒப்பந்தத்தை எதிர்க்கின்றார் என்பது குறித்தே அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

சிங்கள அரசியல் தலைவர்களிடையே உள்ளகப் போட்டிகள், கட்சி அரசியல் பூசல்கள் இருப்பதாகக் கூறினாலும் சீன – இலங்கை பாதுகாப்பு ஒப்பந்த



விடயத்தில் இணங்கிச் செல்லும் அளவுக்கு ஏன் அமெரிக்க – இலங்கைப் பாதுகாப்பு ஒப்பந்த விவகாரத்தில் அவர்கள் ஒளித்து விளையாடுகின்றனர் என்பது குறித்தும் அமெரிக்கத் தூதரகம் குழப்பமடைந்துள்ளது.

இது தொடர்பாகவே மஹிந்த ராஜபக்ஷ அணியோடு அமெரிக்கத் தூதரக அதிகாரிகள்பேசிவருகின்றனர். ஆனாலும் இதுவரை சரியான பதில் கிடைக்கவில்லையென அமெரிக்கத் தூதரகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எவ்வாறாயினும் இலங்கையில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் பின்னரான சூழலில், பிரதான சிங்கள அரசியல் கட்சிகளின் போக்குகளில் அமெரிக்க அதிகாரிகள் சந்தேகம் கொண்டுள்ளனர் என்பதையே கொழும்பில் உள்ள தூதரகத்தின் அரசியல் நகர்வுகள் கோடிட்டுக்காட்டுகின்றன.

இலங்கையில் ஆட்சியை மாத்திரம் கைப்பற்றுவதற்கும், ஈழத் தமிழரின் தமிழ்த் தேசியக் கோட்பாட்டை நசுக்குவதற்கும், நிதியைப் பெறுவதற்கும் மாத்திரமே சிங்கள அரசியல் தலைவர்கள் தங்களை நாடுகின்றனரோ என்ற சந்தேகம் கூட அமெரிக்க அதிகாரிகள் மத்தியில் தற்போது எழ ஆரம்பித்துள்ளன. அமெரிக்காவின் சமீபகாலச் சந்தேகங்கள் இதனையே காண்பிக்கின்றன என அவதானிகள் கூறுகின்றனர்.

1995ஆம் ஆண்டு சந்திரிக்கா தலைமையிலான பொது ஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் அமெரிக்காவுடன் சோபா எனப்படும் பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றைச் செய்திருந்தது.

அந்த ஒப்பந்தம் கடந்த ஆண்டு நவம்பர் மாதத்துடன் நிறைவடைந்துள்ளது. அந்த ஒப்பந்தத்தைப் புதுப்பிக்கும் நோக்கில் அமெரிக்கா பேச்சு நடத்தி வருகின்றது. இலங்கைப் படையினருக்கான பயிற்சிகள் தகவல் பரிமாற்றங்கள் துறைமுகப் பயன்பாடுகள், ஆயுதப் பயிற்சிகள், கடற்பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் சோபா எனப்படும் பாதுகாப்பு ஒப்பந்தத்தில் கூறப்பட்டிருந்தன.

கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் 26 ஆம் திகதி மஹிந்த ராஜபக்ஷவை மைத்திரிபால சிறிசேன திடீரெனப் பிரதமராக்கிய போதும் கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் இந்த ஒப்பந்தம் குறித்து மஹிந்த ராஜபக்ஷவுடனும் பாதுகாப்புச் செயலாளராகப் பதவி வகித்திருந்த ஹேமசிறி பெர்ணாண்டோவுடன் கலந்துரையாடியிருந்தனர்.

அதேவேளை, சீனாவுடன் கடந்த 14 ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன செய்துகொண்ட பாதுகாப்பு ஒப்பந்தத்தின் பிரகாரம் இலங்கை முப்படையினர் உள்ளடங்கிய குழு ஒன்று மேலதிகப் பயிற்சிக்காகச் சீனாவுக்குச் செல்லவுள்ளது.

அடுத்த வாரம் சீனாவுக்குச் செல்லவுள்ள இலங்கை இராணுவ அதிகாரிகள் அடங்கிய குழு முழுமையான பயிற்சி நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளது. குறிப்பாகக் கடற்பாதுகாப்பு, நவீன தொழில்

> **சிங்கள அரசியல் தலைவர்களிடையே உள்ளகப் போட்டிகள், கட்சி அரசியல் பூசல்கள் இருப்பதாகக் கூறினாலும் சீன - இலங்கை பாதுகாப்பு ஒப்பந்த விடயத்தில் இணங்கிச் செல்லும் அளவுக்கு ஏன் அமெரிக்க - இலங்கைப் பாதுகாப்பு ஒப்பந்த விவகாரத்தில் ஒழித்து விளையாடுகின்றனர் என்பது குறித்தும் அமெரிக்கத் தூதரகம் குழப்பமடைந்துள்ளது.**

நுட்ப ஆயுதங்களைக் கையாளுதல் உள் ளிட்ட பயிற்சிகள் சீனாவில் வழங்கப்படவுள்ளன என இலங்கைப் பாதுகாப்பு அமைச்சு கூறியுள்ளது.

ஆனால் இந்தப் பயிற்சிகள் எவ்வளவு காலவரையறையைக் கொண்டவையெனக் கூறப்படவில்லை. முதற்கட்ட பயிற்சி நிறைவடைந்தவுடன் மற்றைய குழு சீனாவுக்குச் செல்லும் என்றும் இலங்கை முப்படைத் தகவல்கள் கூறுகின்றன.

சீன – இலங்கைப் பாதுகாப்பு ஒப்பந்தம் சென்ற 14 ஆம் திகதி இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, சீன ஜனாதிபதி சீ ஜின்பிங் ஆகியோருக்கிடையே பீஜிங்கில் கைச்சாத்திடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

நன்றி - கூர்மை

# அரசியல் நோக்குடனேயே போராடினார்கள் புலிகள்!

## கூறுகின்றார் ஞானசார தேரர்

கொழும்பு, மே 30

விடுதலைப் புலிகளின் போராட்டத்துக்கான காரணம் குறித்து ஆராய்ந்திருந்தால், நாட்டில் 30 வருடகால யுத்தம் நீடித்திருக்காது பல்லாயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டிருக்கமாட்டார்கள் எனபொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளுக்கு அரசியல் நோக்கம் காணப்பட்டது. ஆனால் இஸ்லாமிய தீவிரவாதம் அவ்வாறான தொன்று அல்லவெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தற்போது நாட்டில் தோன்றியுள்ள பிரச்சினைக்கு எம்மால் தீர்வு காண முடியும். ஆகையால் இஸ்லாமிய அடிப்படைவாதிகளின் செயற்பாட்டை ஒழிப்பதற்கு மதத் தலைவர்களின் தலையீடுகளே அவசியமாகும். இதில் அரசியல்வாதிகள் தலையிடத் தேவையில்லை. நாட்டின் பாதுகாப்பு, பொருளாதார விடயங்களில் அரசியல்வாதிகள் அவதானம் செலுத்தினால் போதுமானதாகும்.

விடுதலைப் புலிகளின் போராட்டத்தில் அரசியல்வாதிகள் தமக்கான நலன்கள் பெற்றுகொள்வதைக் கருத்திற்கொண்டு செயற்பட்டார்கள். மாறாக அவர்களின் போராட்டத்துக்கான காரணம் குறித்து ஆராய்ந்திருந்தால் நாட்டில் 30 வருடகால யுத்தம் நீடித்திருக்காது பல்லாயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டிருக்கமாட்டார்கள். புலிகளுக்கு அரசியல் நோக்கம் காணப்பட்டது. ஆனால் தொடர் குண்டுத் தாக்குதலை நடத்தியவர்களுக்கு நோக்கம் என்று ஒன்றில்லை.



ஆனால்தற்போதுள்ள பெரும்பாலான அரசியல் கட்சிகள், தாக்குதலின் ஊடாக அரசியல் இலாபம் பெற முனைவது கவலையளிக்கின்றது. மேலும் சஹ்ரான் போன்ற பயங்கரவாதிகள் உருவாவதற்கு பின்னணியை ஏற்படுத்தி கொடுத்த முஸ்லிம் தலைவர்கள் மீது நடவடிக்கை எடுக்காமல் பேச்சுவார்த்தை நடத்திகொண்டிருக்கின்றார்கள் – என்றார். (ஐ)

# வெடிபொருள் வெடித்ததில் டிராக்டர் சாரதி படுகாயம்!

முல்லைத்தீவு, மே 30

புதுக்குடியிருப்புப் பிரதேசத்துக்கு உட்பட்ட நெத்தலியாற்றுப் பகுதியில் தனிநபர் ஒருவரின் தென்னந்தோட்டக் காணியை உழவு செய்து கொண்டிருந்தவேளை நிலத்தில் புதையுண்டு கிடந்த வெடிபொருள் ஒன்று வெடித்துள்ளது. இதன்போது டிரக்டரின் இரு சில்லுகள் காற்றுப் போனமையுடன் உழவு இயந்திரத்தின் சாரதியும் படுகாயமடைந்தார். இந்தச் சம்பவம் கடந்த 27ஆம்திகதி இடம்பெற்றது.



இது தொடர்பில் விசுவமடு மேற்கு நெத்தலியாறு பகுதியில் வசித்து வரும் காணி உரிமையாளர் ஊர்மிளா கருத்து தெரிவிக்கையில் –

தென்னந்தோட்ட காணியை உழவு செய்தபோது வெடிபொருள் வெடித்துள்ளது. இதன்போது உழவு இயந்திரத்தின் சாரதியான 4 பிள்ளைகளின் தந்தையான சந்தணசாதி ஜேன்சன் ஜெயராஜ்(வயது - 32) என்பவர் கையிலும் தலையிலும், காலிலும் காயமடைந்த நிலையில் கிளிநொச்சி தர்மபுரம் மருத்துவமனை கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார் – என்றார். (ஐ)

# மாங்குளத்தில் வீடு புகுந்து ரவுடிக் கும்பல் அட்டகாசம்

## பெண்கள் உட்பட ஐவர் காயம்

முல்லைத்தீவு, மே 30

மாங்குளம் பகுதியில் நேற்றுமுன் தினம் இரவு வாள்வெட்டுக் கும்பலொன்று வீடு புகுந்து தாக்குதலில் ஈடுபட்டதில் பெண்கள் உட்பட ஐவர் காயமடைந்த நிலையில் மாங்குளம் வைத்தியசாலையில் சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மாங்குளம் புதிய கொலனியைச் சேர்ந்த சிவராசா என்பவரின் வீட்டுக்குள் வாள், கத்தி, கம்பி, பொல்லு முதலிய ஆயுதங்களுடன் அத்துமீறி நுழைந்த கும்பல் அங்கிருந்தவர்களைச் சரமாரியாகத் தாக்கியதுடன் பெறுமதியான பொருள்களையும் அடித்துடைத்து சேதமாக்கியுள்ளது.

இவர்களது தாக்குதலுக்குள்ளான பெண்கள் மாங்குளம் ஆதார வைத்திய சாலையில் சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.



அத்துடன் வீட்டிலிருந்த சில பெறுமதியான உடைமைகளையும் ரவுடிக்கும்பல் அள்ளிக்கொண்டு சென்றுள்ளதாகப் பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் கவலை வெளியிட்டனர். இது தொடர்பான விரிவான விசாரணைகளை மாங்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# வரணி சிமிழ் கண்ணகை அம்மன் விவகாரம்; வழிபடுவோர் சபை அமைப்பதற்குத் தீர்மானம்

## எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், மே 30

வரணி வடக்கு சிமிழ் கண்ணகை அம்மன் ஆலயத்தில் எழுந்துள்ள பிரச்சினைக்கு வழிபடுவோர் சபை அமைத்து ஆலயத்தை பரிபாலிப்பதற்கு நிர்வாகம் ஒன்றைத் தெரிவு செய்வதன் மூலம் தீர்வு காண்பது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேற்படி ஆலய வருடாந்த திருவிழா சமூக வேறுபாடு காரணமாக நிறுத்தப்பட்டுள்ளமைக்கு தீர்வு காணக் கோரி பாதிக்கப்பட்ட மக்கள் ஆலயத்தில் மேற்கொண்டுவரும் சத்தியாக்கிரகப் போராட்டத்திலேயே மேற்படிதீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிரதேசசெயலகம், பிரதேசசபை ஆகியவற்றின் அதிகாரிகள், சைவ அமைப்புக்கள், பொது அமைப்புக்கள், சிவில் சமூக அமைப்புக்கள், பொலிஸ் அதிகாரிகள் போன்றவர்களின் பங்கு பற்றுதலுடன் ஆலயத்தில் பொதுக் கூட்டம் ஒன்றைக் கூட்டி அங்கு நிர்வாகம் ஒன்றைத் தெரிவு செய்வது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

சிமிழ் கண்ணகை அம்மன் ஆலயத்தைப் பரிபாலனம் செய்யும் நபர்கள் எனக் கூறப்படும் ஒரு சிலர் ஆலயத்தில் திருவிழா செய்யும் 7 ஆம், 9 ஆம் திருவிழா உபயகாரர்களைச் சமூக வேறுபாடு காரணமாக ஒதுக்கி வருகின்றனர். இந்தச் சமூகத்தினர்



சுவாமி தூக்கக்கூடாது எனவும் வடம் பிடித்து தேர் இழுக்கக்கூடாது எனவும் கூறி வந்தனர்.

இதன் ஒரு கட்டமாக கடந்த வருடம் (2018) வருடாந்த மகோற்சவத்தின் தேர்த் திருவிழாவின்போது ஜே.சி.பி. கனரக இயந்திரத்தின் மூலம் தேர் இழுக்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாக இந்த வருடம் கடந்த 20 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவேண்டிய திருவிழாவை நிறுத்தியுள்ளனர்.

7ஆம், 9 ஆம் திருவிழா உபயகாரர்கள் திருவிழாவிற்குரிய பணத்தை தம்மிடம் தரவேண்டும் எனவும் தாங்கள் திருவிழா செய்வார்கள் எனவும் இவர்கள் சுவாமி தூக்கவோ வடம் பிடித்து தேர் இழுக்கவோம் முடியாது எனவும் ஆலயப் பரிபாலகர்களால் கூறப்பட்டது. இதற்கு அந்தச் சமூகத்

கொடியேற்றப்படாமல் திருவிழா தொடங்கப் படவில்லை.

பாதிக்கப்பட்ட தரப்பினர் தமக்கு நீதி கோரி தென்மராட்சி பிரதேச செயலகத்திற்கு முன்பாக இரு தினங்கள் போராட்டத்தில் ஈடுபட்டு அங்கு தீர்வு கிடைக்காத நிலையில் ஆலயத்திற்கு முன் பாக இன்று தொடர் சத்தியாக்கிரகப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

நேற்று முன் தினம் பிற்பகல் அங்கு கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. இதில் சத்தியாக்கிரகத்தில் ஈடுபடும் மக்களுடன் அகில இலங்கை சைவ மகா சபை, சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு ஆகியவற்றின் பிரதிநிதிகள், இந்து – பௌத்த கலாசார பேரவையின் செயலாளர், மேற்படி ஆலயக் குருக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இந்தக் கூட்டத்திலேயே எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பொதுக் கூட்டம் ஒன்றைக் கூட்டுவது எனவும் நேற்றுப் புதன்கிழமை தொடக்கம் வழிபடுவோர் சபையில் இணைபவர்களுக்கான அங்கத்துவப் படிவங்களை வழங்குவது எனவும் தீர்மானிக்கப்பட்டது. (ஐ)

# ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட புலிச் சந்தேக நபருக்கு விடுதலை

கொழும்பு, மே 30

வெடிபொருள்களை வைத்திருந்தார் என்ற குற்றம் சாட்டப்பட்ட விடுதலைப் புலிகள் இயக்கச் சந்தேக நபர் ஒருவரை மேன் முறையீட்டு நீதிமன்றம் நேற்று முன் தினம் விடுதலை செய்தது.

திருகோணமலையைச் சேர்ந்த மீனவரான கனக சூரியன் அழகதுரை என்பவர், விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர் என்ற சந்தேகத்தில் 2008 ஜூன் 29ஆம் திகதி, உப்பூறல் சோதனைச் சாவடியில் படையினரால் கைது செய்யப்பட்டார்.

அவர் வெடிபொருள்களை வைத்திருந்தார் என்று குற்றம்சாட்டப்பட்டிருந்தது. அவசரகாலச்சட்ட விதிகளின் கீழ், திருகோணமலை மேல் நீதிமன்றத்தில் அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இராணுவத்தினர், பொலிஸார் மற்றும் அரச பிரதிப் பகுப்பாய்வாளர் ஆகியோர் சாட்சிகளாகச் சேர்க்கப்பட்டனர்.

இந்தக் குற்றச்சாட்டுகளைச் சந்தேக நபர் நிராகரித்திருந்தபோதும், அவரைக் குற்றவாளி எனக் கண்ட திருகோணமலை மேல் நீதிமன்றம், 2014 ஜூலை 10ஆம் திகதி, ஆயுள்தண்டனை விதித்து தீர்ப்பளித்திருந்தது.

இந்தத் தீர்ப்புக்கு எதிராகவும், தண்டனைக்கு எதிராகவும், கனகசூரியன் அழகதுரை மேன்முறையீட்டு நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்திருந்தார்.

தமது கட்சிக்காரருக்கு எதிரான குற்றச்சாட்டுகள் வலுவாக இல்லை என்றும், ஆதாரங்களை முறைப்படி சமர்ப்பிக்கப்படவில்லை என்றும் மனுதாரரின் சட்டவாளர் வாதிட்டார். சாட்சியங்களும், ஆதாரங்களும் சரியாக முன்வைக்கப்படவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த வழக்கில் சட்டமா அதிபர் சார்பில் முன்னிலையான சட்டவாளர், இந்த வழக்கை தொடர்ந்து முன்னெடுக்க விரும்பவில்லை என்று கூறினார்.

இந்த நிலையில் திருகோணமலை மேல் நீதிமன்றம் அளித்த ஆயுள் தண்டனைத் தீர்ப்பை ரத்துச் செய்து, குற்றம்சாட்டப்பட்டவரை விடுதலை செய்து மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ஐ)

## பதவி நீக்கப்பட்டார் நெய்மர்



அடுத்த மாதம் ஆரம்பிக்கின்ற நிலையில், இந்த பதவி மாற்றம் இடம்பெற்றுள்ளது.

27 வயதான நெய்மருக்கு கடந்த 8 மாதங்களுக்கு முன்னர் பிரேசில் உதைபந்து அணியின் தலைவர் பதவி வழங்கப்பட்டது.

எனினும் அதன் பின்னர் அவர் சந்தித்த ஒழுக்கப் பிரச்சினைகள் காரணமாக பெரும் மனப்போராட்டங்களுக்கு ஆளாகி இருக்கிறார் என பிரேசில் அணி நிர்வாகம் தெரிவித்துள்ளது.

பிரேசில் உதைபந்து அணியின் தலைவர் பதவியில் இருந்து நெய்மார் நீக்கப்பட்டுள்ளார். அவருக்கு பதிலாக டேனி அல்வெஸ் அணியின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

'கோபா அமெரிக்கா' கிண்ணத்துக்கான தொடர்

## உலகக்கிண்ண தொடரின் முதல் போட்டியிலிருந்து விலகினார் ஸ்டெயின் !

உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடரில் இங்கிலாந்து அணியுடனான முதல் போட்டியில், தென்னா பிரிக்கா அணியின் வேகப்பந்து வீச்சாளர் டேல் ஸ்டெயின் விளையாடமாட்டார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

காயத்தில் இருந்து முழுமையாக குணம் அடையாததால், அவர் இன்று கெனிங்டன் ஓவல் மைதானத்தில் நடைபெறும் போட்டியில் விளையாடமாட்டார் எனத் தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

இந்தியாவில் நடைபெற்ற ஐ.பி.எல். தொடரின் போது, பெங்களூர் அணிக்காக விளையாடிய ஸ்டெயினுக்கு தோள்பட்டையில் காயம் ஏற்பட்டது. ஆனால் இன்னும் காயம் குணமாக வில்லை.

இந்த நிலையில், இது குறித்து தென்னாபிரிக்கா அணியின் தலைமை பயிற்சியாளர் ஒட்டிஸ் கிப்சன் கூறுகையில்–

ஸ்டெயின் இன்னும் சிறந்த வகையில் குணமடையவில்லை. குணமடைவதற்கு இன்னும் வெகுதூரம் இல்லை. இருந்தாலும் தயாராகவில்லை.

உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர், ஆறுவாரக் காலம் நடைபெறுகிறது. இந்த விடயம் குறித்து உடனடியாக முடிவு எடுக்க தேவையில்லை.

அவர் முதல் போட்டியில் இடம்பிடிக்க மாட்டார். நாங்கள் அவரைத்தவிர 14 வீரர்கள் பெற்றுள்ளோம். அதில் இருந்து நான்கு பேரை தேர்வு செய்வோம்–என்றார்.



### 10 வருடங்களின் பின்

## பாக். மண்ணில் விளையாடவுள்ளது இலங்கை அணி!

கடந்த பத்து வருடங்களுக்கு பிறகு பாகிஸ்தான் மண்ணில், இலங்கை கிரிக்கெட் அணி விளையாடவுள்ளது.

கடந்த 2009ஆம் ஆண்டில் பாகிஸ்தான் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்த இலங்கை கிரிக்கெட் அணியினை இலக்குவைத்து நடத்தப்பட்ட தீவிரவாதத் தாக்குதலின் பிறகு, இலங்கை அணி பாகிஸ்தான் சென்று விளையாடவுள்ளது.

இதற்கமைய, உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடருக்கு பிறகு இரு அணிகளுக்கிடையில் இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் கிரிக்கெட் தொடரை நடத்த பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தீர்மானித்துள்ளது.

ஐ.சி.சி. டெஸ்ட் சம்பியன்ஷிப்பின் ஓர் அங்கமாக நடைபெறவுள்ள இந்த டெஸ்ட் தொடரின், இரு போட்டிகளையும், பாகிஸ்தானின் லாஹூர் மற்றும் கராச்சி ஆகிய மைதானங்களில் நடத்த பாகிஸ்தான் கிரிக்கெட் சபை திட்டமிட்டுள்ளது.

பாகிஸ்தான் கிரிக்கெட் சபையினால் இலங்கை கிரிக்கெட் சபைக்கு வீரர்களின் பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பான விடயங்கள் அனைத்தும் வழங்கப்பட்டுள்ளன எனவும், இலங்கை கிரிக்கெட் சபை பாகிஸ்தான் சுற்றுப் பயணத்திற்கான திகதியை உறுதிசெய்யும் வரையில் காத்திருப்பதாகவும் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

இவ்வாறு இரு அணிகளுக்கிடையில் சர்வதேச கிரிக்கெட் தொடரொன்றை நடத்துவதன் மூலம், எதிர்காலத்தில் பாகிஸ்தானில் சென்று விளையாட ஏனைய அணிகளும் விருப்பம் கொள்ளும் என பாகிஸ்தான் கிரிக்கெட் சபை கருதுகின்றது.

கடந்த 2009ஆம் ஆண்டு மார்ச் 3ஆம் திகதி, இலங்கை அணி வீரர்கள் சென்றிருந்த பேருந்தின் மீது கொடூரமான தீவிரவாதத் தாக்குதல் நடாத்தப்பட்டிருந்தது. எனினும் இதன்போது, இலங்கை வீரர்கள் சிறு காயங்களுடன் உயர் தப்பினர்.

ஆனாலும் இந்த விடயம் உலகில் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியதோடு, சர்வதேச அணிகள் பாகிஸ்தான் சென்று விளையாடவும் தயக்கம் காட்டின. இதனால் கடும் நஷ்டமடைந்த பாகிஸ்தான் கிரிக்கெட் சபை, பாகிஸ்தான் அணிகளின் போட்டிகளை ஐக்கிய அரபு அமீரகத்தில் நடத்தி வந்தது.

அத்தோடு, பாகிஸ்தானில் சர்வதேச போட்டிகளை மீள நடத்தவும் பெரும் முயற்சிகளை மேற்கொண்டு வந்தது.

அந்தவகையில் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை 2015ஆம் ஆண்டு சிம்பாப்வே அணியின் சுற்றுப் பயணம் மூலம் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளைப் பாகிஸ்தானில் மீண்டும் கொண்டு வந்த போதிலும் பெரிய அணிகள் பாகிஸ்தான் வந்து கிரிக்கெட் போட்டிகளில் விளையாட தொடர்ந்தும் மறுத்திருந்தன.

எனினும், பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அண்மைக்காலங்களில், வெளிநாட்டு வீரர்கள் பங்கேற்ற பாகிஸ்தான் சுப்பர் லீக் ரி20 தொடர், ஐ.சி.சி. உலக பதினொருவர் அணி, மேற்கிந்திய தீவுகள் அணி மற்றும் இலங்கை அணி ஆகியவை பங்குபெற்ற ரி-20 தொடர் என்பவற்றை பாகிஸ்தான் மண்ணில் மிக வெற்றிகரமாக நடத்தியிருந்தது.

இப்படியான நிலைமைகள் காரணமாக பாகிஸ்தானில் மீண்டும் சர்வதேசப் போட்டிகள் நடைபெறுவதற்கான சாதக நிலைமைகள் உருவாகுமென பாகிஸ்தான் கிரிக்கெட் சபை எதிர்பார்த்தது. ஆனால் இன்னமும் பாகிஸ்தான் மீதான அச்சம் சர்வதேச அணிகளுக்கு நீங்கவில்லை.

## உலகக் கிண்ணத் திருவிழா இன்று கோலாகல ஆரம்பம்




இங்கிலாந்து மற்றும் வேல்ஸில் இன்று ஆரம்பமாகவுள்ள உலகக்கிண்ண கிரிக்கெட் தொடர், எதிர்வரும் ஜூன் 14ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இதில் நடப்புச் சம்பியன் அவுஸ்ரேலியா, இந்தியா, இங்கிலாந்து, தென்னாபிரிக்கா, பாகிஸ்தான், இலங்கை, நியூசிலாந்து, மேற்கிந்திய தீவுகள், பங்களாதேஷ் ஆப்கானிஸ்தான் ஆகிய 10 நாடுகள் பங்கேற்கின்றன

ஒவ்வொரு அணியும் மற்ற அணிகளுடன் தலா ஒருமுறை மோத வேண்டும். முதல் நான்கு இடங்கள் பிடிக்கும் அணிகள் அரையிறுதிக்கு முன்னேறும்.

ஐ.சி.சி.யின் தரவரிசையில் முதல் 10 இடங்களில் தரப்படுத்தப்பட்டுள்ள அணிகள், இம்முறை ஒன்றையொன்று எதிர்த்து முதல் சுற்றில் விளையாடவுள்ளமையால், அனைத்துப் போட்டிகளும் முக்கியமானவையாகப் பார்க்கப்படுகின்றன.

இத்தொடரில், 45 லீக் போட்டிகள் மற்றும் 3 வெளியேற்று போட்டிகள் என 48 போட்டிகள், சுமார் 12 நகரங்களில் நடைபெறவுள்ளன.

இதுவரை நடைபெற்ற உலகக் கிண்ண தொடரில், ஆஸ்திரேலியா 5 முறையும், மேற்கிந்தியத் தீவுகள் மற்றும் இந்தியா தலா 2 முறையும், இலங்கை மற்றும் பாகிஸ்தான் அணிகள் தலா ஒரு முறையும் உலகக்கிண்ணத்தை வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வடமாகாண ரீதியான மாபெரும் மாட்டுவண்டி சவாரிப் போட்டி

*யாழ்ப்பாணம், மே 30*

இளவாலை வருத்தபடாத வாலிபர் சங்கத்தின் ஏற்பாட்டில் வலிவடக்கு சவாரி சங்கத்தின் அனுமதியோடு எதிர் வரும் ஞாயிற்றுக்கிழமை வலி வடக்கு சவாரி விடந்தையில் மதியம் 1.30 மணி முதல் தங்கப் பதக்கத்தைப் பரிசாகக் கொண்ட மாபெரும் மாட்டுவண்டி நடைபெறவுள்ளது.

சித்திரை கொண்டாட்டத்தை முன்னிட்டு சங்கத்தினால் ஒழுங்குசெய்து 21-04-2019 அன்று இடைநிறுத்தப்பட்ட போட்டியே நடைபெற இருப்பதால், அன்றைய போட்டியில் பங்கு கொண்ட/கட்டுபணம் செலுத்திய சவாரி போட்டியாளர்கள் கட்டுபணமின்றி பங்கு கொள்ள முடியும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ஐ)

## பந்து வீச்சாளர்கள் போட்டியை மாற்றியமைக்கக் கூடியவர்கள்



போட்டியின் போக்கை பந்து வீச்சாளர்கள் மாற்றியமைக்கும் திறன் கொண்டவர்கள் என இலங்கைக் கிரிக்கெட் அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளர் லசித் மலிங்க தெரிவித்துள்ளார்.

உலகக்கிண்ணத் கிரிக்கெட் தொடருக்கான திட்டம் குறித்து கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்–

கிரிக்கெட் போட்டி துடுப்பாட்ட வீரர்களை நோக்கி சென்றுகொண்டிருக்கிறது. ஆனால், பந்துவீச்சாளர்கள் போட்டியை மாற்றிய மைக்க கூடியவர்களாக இருக்க முடியும். அவர்கள் விக்கெட்டுக்களை வீழ்த்தும் போது, போட்டியில் வெற்றிபெற முடியும்.

திறமை வாய்ந்த பந்து வீச்சாளர்கள் எந்த அணியில் இடம் பிடித்திருந்தாலும், எந்தவொரு ஆடுகளத்திலும் அணியின் வெற்றிக்கு முக்கிய காரணமாக இருப்பார்கள். போட்டியை எப்படி ஆராய வேண்டும் என்பது பற்றி அவர்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்பது அவசியம்.

நான் கடந்த சில வருடங்களாக விதவிதமான பந்து வீச்சுக்கள் மீது கவனம் செலுத்தி வருகிறேன். இது எனக்கு உறுதியை அதிக அளவில் கொடுத்துள்ளது. ஆனால், போட்டியில் சூழ்நிலையை நன்கு அறிவது மிகமிகமுக்கியம் எனக்கூறினார்.

இதற்கிடையில், உலகக் கிண்ண தொடரின் ஆரேலியா அணியுடனான பயிற்சிப் போட்டியின் பின்னர், ஆஸ்திரேலியா அணியின் வேகப்பந்து வீச்சு சகலதுறை வீரரான மார்கஸ் ஸ்டாய்னிஸ்ற்கு, மெதுவாக பந்து வீசுவது எப்படி என மலிங்க கற்றுக்கொடுத்தார். இந்த விடயம் அனைவராலும் பாராட்டப்பட்டது.

இதையடுத்து, மிகப்பெரிய தொடரில் மோதும் நிலையில் இப்படி கற்றுக் கொடுத்துள்ளீர்களே? என்று மலிங்கவிடம் கேட்கப்பட்டது. அதற்கு பதிலளித்த மலிங்க–

ஸ்டாய்னிஸ் என்னிடம் வந்து மெதுவாக பந்து வீசுவது எப்படி என்றுகேட்டார். மட்டுப்படுத்தப்பட்ட போட்டியில் விதவிதமான பந்துகளை வீசுவது முக்கியமானது. எந்தவொரு வீரர் விரும்பினாலும், எல்லாவித அறிவுரைகளையும் நுணுக்கங்களையும் வழங்க நான் தயாராக இருக்கிறேன்.

சூழ்நிலைகளை புரிந்து கொண்டு மெதுவாக பந்து வீசுவது எப்படி என்று சொல்லிக் கொடுத்தேன். அவருடன் இதை பகிர்ந்து கொண்டதில் மிகவும் மகிழ்ச்சி என கூறினார்.

## மைத்திரியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னாள் பிரதி அமைச்சருமான பிரபா கணேசன் தனது அந்தப் பதவியை இராஜினாமாச்செய்துவிட்டார்எனஜனநாயக மக்கள் காங்கிரஸ் ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளது.

இது சம்பந்தமாக பிரபா கணேசன் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையில் –

நான் கடந்த இரண்டு வருட காலமாக ஜனாதிபதியின் வன்னி மாவட்ட கருத்திட்ட பணிப்பாளராக நியமிக்கப்பட்டிருந்தேன். உண்மையிலே இது ஓர் அரசியல் நியமனமேயாகும். இந்தப் பதவியின் ஊடாகப் பாரிய அளவில் மக்களுக்கான சேவையை ஆற்றக் கூடியதாக எவ்விதமான நிதி ஒதுக்கீடும் சரியான முறையில் வழங்கப்படவில்லை. இருப்பினும் கடந்த ஆண்டு நான் கொடுத்த பல வேலைத்திட்டங்களில் ஒரு சில வேலைத்திட்டங்களே நடைமுறைப்படுத்தப்பட்டன.

இது சம்பந்தமாக கடந்த ஆண்டு இறுதியில் இடம்பெற்ற பணிப்பாளர்கள் கூட்டத்தில் எனது அதிருப்தியை தெரிவித்த பொழுது 2019 ஆம் ஆண்டு பாரிய அளவில் நிதி ஒதுக்கீடுகள் செய்யப்படும் என்ற உத்தரவாதம் மேலதிக செயலாளரின் ஊடாக எனக்கு வழங்கப்பட்டது.

அதன் அடிப்படையில் இந்த வருட ஆரம்பத்தில் முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டத்தின் ஒவ்வொரு பிரதேச செயலகத்தின் ஊடாகவும் கிராம தலைவர்களின் சந்திப்பை ஏற்படுத்தி, அதன் மூலம் பல கோடி ரூபாவுக்கான வேலைத்திட்டங்களை பெற்றுக் கொண்டேன். குறிப்பாக வன்னி மாவட்டத்தில் நிலவிவரும் சிறுநீரக நோயைக் கட்டுப்படுத்தக் கூடிய சுத்திகரிக்கப்பட்ட தண்ணீர் தாங்கிகள் அமைப்பதற்கான வேலைத்திட்டங்களை உள்வாங்கினேன். இவ் வேலைத்திட்டங்களை ஜனாதிபதியின் செயலகத்திற்கு அனுப்பிய போது எவ்வாறான கவனமும் எடுக்கப்படாததை நான் அறிந்தேன்.

இது சம்பந்தமாக ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி தயாசேகரவிடம் முறையிட்ட போது எனது செயல்பாடுகளை நிறுத்த வேண்டும் என ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மஸ்தான் முறைப்பாடு செய்ததார் எனவும், நான் எனது கட்சியான ஜனநாயக மக்கள் காங்கிரஸையே வன்னி மாவட்டத்தில் வளர்த்தெடுக்கிறேன், ஜனாதிபதி சம்பந்தமான எந்தவொரு விடயத்தையும் மக்களிடம் கொண்டு செல்வதில்லை என அவர் குற்றம் சுமத்தினார் எனவும் தெரிவித்தார்.

அதே போல் நான் வன்னி மாவட்ட மக்களின் தேவைக்காகக் கொடுத்த அனைத்து வேலைத் திட்டங்களும் இடைநிறுத்தப்பட்டு விட்டன எனவும் அவர் தெரிவித்தார்.

மக்களிடம் ஜனாதிபதியைப் பற்றி தெரிவிப்பதற்கு ஜனாதிபதி எவ்விதமான சேவையையும் வன்னி மாவட்ட மக்களுக்குச் செய்யவில்லை. மாறாக, நாட்டின் அரசியல் குழப்பங்களுக்கே காரணமாக இருந்திருக்கின்றார்.

இருப்பினும் வன்னி மாவட்ட மக்களின் சேவையினை முன்னெடுப்பதற்காகவே நான் பொறுமையுடன் செயல்பட்டேன். வன்னி மாவட்டத்தில் எனது கட்சியின் வளர்ச்சியைப் பார்த்துப் பயந்துபோன–தமிழ்வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றம் சென்ற –மஸ்தான் இதன் ஊடாக வன்னி மாவட்ட தமிழ் மக்களுக்கு நான் செய்து வந்து கொண்டிருக்கும் சேவையினை இடைநிறுத்த முயற்சிக்கின்றார். வன்னி மாவட்டத்தில் 85 வீதமானவர்கள் தமிழ் மக்களே.

நான் எனது சொந்த நிதியின் ஊடாகவே அதி கூடிய மக்கள் தேவைகளை நிறைவேற்றிக் கொடுத்திருக்கின்றேன். ஜனாதிபதியின்பணிப்பாளர்என்றமுறையில் அனைத்து கிராம மட்டங்களில் உள்ள தலைவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்கு இந்த பதவி எனக்கு பிரயோஜனமாக இருந்துள்ளது. எமது கட்சியின் வளர்ச்சியும் வன்னி மாவட்ட மக்கள் எனக்கு கொடுத்துக் கொண்டிருக்கும் அமோக ஆதரவும் இந்த முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினருக்கும், அமைச்சர்ஒருவருக்கும் இனிஒருபோதும் தமிழ் வாக்குகளை பெற முடியாது என்று உறுதிப்படுத்தியுள்ளன. அதே போல் இன்று வன்னி மாவட்டத்தில் எந்த மானமுள்ள தமிழனும் எதிர்காலத்தில் முஸ்லிம் அரசியல்வாதிகளுக்கும் வாக்களிக்கப் போவதில்லை என்பதில் திடமாக இருக்கின்றார்கள் என்பது தெளிவாக உள்ளது. –என்றார்.

## அரச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாக இருக்குமாறும் யாழ்ப்பாணப் பொலிஸார் கோரியுள்ளனர்.

மானிப்பாய் பகுதியில் உள்ள அரசவங்கி ஒன்றின் கிளையிலும், தீவகப் பகுதியில் உள்ள அரச வங்கி கிளையிலும் வேலைவாய்ப்பைப் பெற்று தருவதாகக் கூறி எட்டு பேருக்கு மேல் ஏமாற்றிப் பணத்தை மோசடி செய்த நபர் தொடர்பிலான தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. அந்த மோசடியாளரால் பாதிக்கப்பட்டவர்கள் அதுதொடர்பில் முறைப்பாடுகளை மேற்கொண்டால் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பொலிஸார் கூறினர்.

யாழ்ப்பாணம் மாநகர சபையில் பணியாற்றும் நபர் ஒருவர் ஆறு இளைஞர்கள் மற்றும் 2 இளம்பெண்களுக்கு அரச வங்கியில் வேலை வாய்ப்பைப் பெற்று தருவதாகக் கூறி 4 இலட்சம் ரூபா முதல் 6 இலட்சம் ரூபா வரை பணம் கேட்டார். வங்கியில் வேலைக்கான நியமனக் கடிதம் கிடைத்ததும் பணத்தைத் தருவதாக நாங்கள் எட்டு பேரும் அந்த நபரிடம் கூறினோம்.

அதன் பிரகாரம் கடந்த 18ஆம் திகதி கொழும்புக்கு 8 பேரையும் அழைத்து 17ஆம் திகதியிடப்பட்ட நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன. அன்றைய தினம் முதலே நீங்கள் வங்கியில் பணியாளராக இணைந்து உள்ளீர்கள் என அந்த நபர் கூறினார். நாங்களும் அதனை நம்பி மறுநாள் எமது நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்த அரச வங்கியின் கிளைக்கு நியமன கடிதத்துடன் பணிக்குச் சென்றோம்.

அங்கு எமது கடிதத்தைப் பார்த்த வங்கி முகாமையாளர், இது தமது வங்கியின் நியமனக் கடிதம் இல்லை எனவும், இது போலியானது எனவும் கூறும் போதே நாம் ஏமாற்றப்பட்டதை அறிந்தோம்.

அதன்பின்னர்எமக்கு வேலைவாய்ப்பைப் பெற்று தருவதாகக் கூறிபணத்தை வாங்கியநபருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு கதைத்தபோது, தனக்கு அது பற்றித் தெரியாது எனவும், தமக்கு வேறு நபரே வேலை வாய்ப்பு இருப்பதாகக் கூறியதனால் அவரிடமே உங்களை அழைத்துச் சென்றேன். அவரிடம் தான் அது தொடர்பில் கேட்க வேண்டும் எனக் கூறி தொலைபேசியைத் துண்டித்துள்ளார். அதன் பின்னர் அவரது தொலைபேசி இலக்கம் செயலிழந்து காணப்படுகின்றது என்று பாதிக்கபட்ட ஒருவர் தெரிவித்தார். (ஜ)

## தாக்குதலாளிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று நடந்த தாக்குதல் சம்பவங்கள் தொடர்பில் ஆராயும் நாடாளுமன்றத் தெரிவுக்குழு முன் நேற்றுத் தோன்றி அவர் சாட்சியம் வழங்கினார்.

அமைச்சர்களான ரவி கருணாநாயக்க, ரவூப் ஹக்கீம் ,எம். பிக்கள் சரத் பொன்சேகா, ஆசு மாரசிங்க, ஜயம்பதிவிக்கிரமரத்ன, நலிந்த ஜெயதிஸ்ஸ ஆகியோர் அவரிடம் கேள்விகளை எழுப்பினர்.

பாதுகாப்புச் செயலர் அங்கு தெரிவித்தவை வருமாறு:–

ஜனாதிபதி இல்லாத பட்சத்தில் பாதுகாப்புச் சபையைப் பிரதமர் கூட்டினால் அதில் அதிகாரிகள் கலந்துகொள்ளவேண்டும்.

2014 ஆம் ஆண்டிலிருந்து இந்தத் தாக்குதல்தாரிகள் குறித்து புலனாய்வு நடவடிக்கைகள் கிடைத்திருந்தன. முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் நாலக்க சில்வா இதுபற்றி அறிந்திருந்தாரோ எனக்கு தெரியாது. ஆனால் பாதுகாப்புத் தரப்பு இயன்றமட்டில் நடவடிக்கைகளை எடுத்திருந்தது.

ஓரிரு புலனாய்வு அதிகாரிகள் கைது செய்யப்பட்டார்கள் என்பதற்காக முழுப் புலனாய்வுத்துறையும் மங்கியது என்று கருத முடியாது. நமது புலனாய்வுத்துறை சிறப்பாகவே செயற்படுகிறது.

அப்துல் ராசிக் என்பவரைக் கைதுசெய்யுமாறுபலர்கேட்டாலும் அவரைக் கைது செய்யப் போதிய சாட்சிகள் இல்லையென்றே பொலிஸ்மா அதிபர் கூறுகிறார். போதிய சாட்சிகள் இருந்தாலே நாம் கைது செய்யலாம். சில இடங்களில் வன்முறைகள் நடந்தாலும் சமூக ஊடகங்களை இடைநிறுத்திப் போலியான தகவல்களை நிறுத்தி நாம் இயல்பு நிலைமையை ஏற்படுத்தினோம். ஊடகங்கள் பொறுப்புடன் செயற்படவேண்டும்.

இந்தத் தாக்குதல் சம்பங்கள் குறித்து முன்னர் பதவியில் இருந்த அதிகாரிகளும் இந்த தெரிவுக் குழுவுக்கு அழைக்கப்பட்டு விசாரிக்கப்பட வேண்டும். தேடுதல்களில் எவரையாவது கைது செய்ய வேண்டுமாயின் இராணுவம் பொறுப்பேற்று பொலிஸில் ஒப்படைக்க முடியும். கூடுதலாக நாம் பொலிஸுடன் இணைந்தே தேடுதல்களை செய்கிறோம். பள்ளிவாசல்கள் போன்ற இடங்களில் மோப்ப நாய்களை இட்டுத் தேடுவதில் சிக்கல் இருக்கிறது. இருந்தாலும் எல்லா இடங்களிலும் நாம் சொல்லிவிட்டு தேடுதல் நடத்த முடியாது.

தேசிய தௌஹீத் ஜமாத் உறுப்பினர்களிடம் பெரிய ஆயுதங்கள் இல்லை. ஆனால் வெடிமருந்துப்பொருட்கள் அவர்களுக்கு கிடைத்தன. அந்த வழிகளைத் தடுத்து நிறுத்தியுள்ளோம். ஆயுதப் பயிற்சியை விட மூளைச் சலவை செய்யப்பட்டவர்களை நாம் புனர்வாழ்வு செய்யவேண்டும். நீண்ட தொலைநோக்குடன் செயற்படவேண்டும். ஆயிரம் பேர் இப்படி பயிற்சிகள் பெற்றிருக்கின்றனர் எனக்கூறப்பட்டாலும் அவர்களைக் கண்டறியவேண்டிய தேவை உள்ளது. அதைச் செய்கிறோம்.

இப்போது வன்முறைகளைச் செய்ய எடுக்கப்பட்ட பல முயற்சிகளை முறியடித்துள்ளோம். இனமுறுகல் ஏற்படும் வகையில் செயற்படுவோர் கைதுசெய்யப்பட்டால் அவர்களுக்குப் பிணைவழங்குவது மறுக்கப்படும்–என்றார். (ஜ)

## தாக்குதல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசிய புலனாய்வுத் தலைவர் சிசிர மெண்டிஸ் நேற்று தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று நடந்த தாக்குதல் சம்பவங்கள் தொடர்பில் ஆராயும் நாடாளுமன்றத் தெரிவுக்குழு முன் நேற்றுத் தோன்றி அவர் சாட்சியம் வழங்கினார்.

அவர் அங்கு மேலும் கூறிய தாவது:–

நான் தேசிய புலனாய்வுத் தலைவர் பதவியில் இருந்தாலும் எனக்கு போதிய அதிகாரம் இல்லை. தாக்குதல் அச்சுறுத்தல்கள் குறித்து எனக்கு கிடைத்த தகவல் ஒன்றை நான் பொலிஸ் மா அதிபருக்குத் தெரிவித்தேன். கடிதம் மூலம் அறிவித்தேன். ஆனால் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று தெரியவில்லை. தேசிய பாதுகாப்புச் சபை கூட்டத்திலும் ஆராயப்படவில்லை.

பெப்ரவரிக்குப் பின்னர் பாதுகாப்புச் சபை ஏப்ரல் வரை கூடவில்லை. இரண்டு மாதங்கள் தேசிய பாதுகாப்புச் சபை கூடவில்லை.

தகவல் பரிமாற்றம் பாதுகாப்புத் தரப்பிடம் இருக்கவேண்டும். அது முக்கியமானது. வவுணதீவுப் பொலிஸார் கொல்லப்பட்டமை சஹ்ரான் குழுவினரால் என்பது விசாரணைகளில் தெரியவந்துள்ளது. மாவனல்லை சம்பவம் குறித்தும் நாங்கள் விசாரணைகளைமேற்கொண்டோம். ஆனால் அந்த விசாரணைகளின் பின்னர் எடுக்கப்பட்ட முடிவுகள் அமுலாகின்றனவா என்பதைப்பார்க்கவேண்டும்.

ஐ.எஸ். பயிற்சிகளைப் பெற்று இலங்கை வந்தோரை விசாரணை செய்யவேண்டுமென நான் பலமுறை வலியுறுத்தியிருந்தேன். வெளிநாட்டில் இருந்து மத போதகர்கள் வரும்போது அவர்களை எப்படிகையாள்வது என்பதை நாங்கள் ஆராய்ந்தோம். மாணவர்கள் கூட வெளிநாட்டில் இருந்து வரும்போது ஆராய்ந்தோம். சில படிவங்களைத் தயாரித்து கொடுத்தோம். சஹ்ரான் பற்றி முழுமையான அறிக்கை ஒன்றை நான் ஏப்ரல் 4 ஆம் திகதி முன்வைத்தேன். ஆனால் எனக்கு போதிய அதிகாரம் இல்லை–என்றார். (ஜ)

## ஞானசாரரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பில் இலங்கைக்கான துருக்கிதூதரகம் விசேட அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

ஞானசார தேரரின் கருத்து பொய்யானது எனவும், எந்தவித அடிப்படையும் அற்றது எனவும் தூதரகம் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

துருக்கியின் ஓர் அமைப்பு ஊடாக இலங்கைக்கு நிதி வருவதாகவும், ஊடகவியலாளர்களுக்கு உபகரணங்கள் வழங்கிப் பிழையான கருத்துக்களை வழங்கத் தூண்டுவதாகவும், ஊடகங்களைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயற்சிப்பதாகவும் ஞானசார தேரர் தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் குற்றம் சாட்டியிருந்தார்.

எனினும் இதனை முற்றாக மறுத்துள்ள துருக்கித் தூதரகம், இலங்கையுடன் துருக்கி 2004 ஆம் ஆண்டு முதல் மிகவும் நெருக்கமான உறவைப் பேணி வருவதாகவும், மனிதாபிமான முறையிலும் தொழில்நுட்பரீதியாகவும் பல உதவிகளை வழங்கியுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

அதேவேளை இலங்கையோடு மிகவும்நெருக்கமாகச்செயற்படும் துருக்கி எந்தவொரு தீவிரவாதத்துக்கு எதிராகவும் தனது ஒத்துழைப்பை வழங்கும் என தூதரகம் அந்த அறிக்கையில் கூறியுள்ளது. (ஜ)

## அதிரடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாகப் பெயரிடப்பட்டுள்ளனர்.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பான தகவல்கள் கிடைக்கப் பெற்றும் அதற்கான நடவடிக்கை எடுக்கவில்லை என்பதால் பாது காப்புச் செயலர் ஹேமசிறி பெர் னாண்டோ மற்றும் பூஜித ஜயசுந்தர ஆகியோரை பதவியிலிருந்து விலகுமாறு ஜனாதிபதி உத்தரவிட்டா

இதனை அடுத்து ஹேமசிறி பெர்னாண்டோ பதவி விலகினார் இருந்தபோதும் பூஜித ஜயசுந்தர பதவி விலகாதமையை அடுத்து அவர் கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்டார். (ஜ)

## நாற்றுக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்றும் அவர் கூறினார்.

வெலிமட பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்–

நாட்டில் மேற்கொள்ளப்பட்ட தொடர் குண்டுத் தாக்குதல்கள் தொடர்பாக விசாரிப்பதற்கு ஆணைக்குழு நியமிக்கப்பட்டது எனினும் தாக்குதலை மேற்கொண்ட முதலாவது சந்தேகநபர் அதாவது தற்கொலை குண்டுதாரி இறந்துவிட்டார்.

இரண்டாவது சந்தேகநபர் இந்த அரசாகும். எனவே அரசுக்குத் தான் தண்டனை வழங்கப்பட வேண்டும். ஆனால் அரசு தனக்குத் தானே தண்டனை வழங்கிக் கொள்ளாது. எனவே புதிய அரசு ஒன்று வெகுவிரைவில் அமைக்கப்பட வேண்டும்–என்றார். (ஜ)

## வாள்வெட்டுக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்பது பேர் காயமடைந்து கிளி நொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த வாள்வெட்டுச் சம்பவத் தின்போது ஆறு பெண்களும் மூன்று ஆண்களும் காயம டைந்தனர்.

வாள்வெட்டு நடந்த வீடுகள் இரத்தத்தால் நனைந்து காணப் படுகின்றன. பட்டா ரக வாகனம் மற்றும் மோட்டார் சைக்கிளில் சென்ற 15க்கும் மேற்பட்டவர்கள் வாள்களுடன் வீடு புகுந்து தாக்குதலில் ஈடுபட்டுள்ளனர்.

அத்தோடு மோட்டார் சைக்கிள் ஒன்றும் எரிக்கப்பட்டுள்ளது. மற் றொரு மோட்டார் சைக்கிள் அடித்துச் சேதமாக்கப்பட்டுள்ளது தற்காலிக வீடு ஒன்றும் எரிக்கப் பட்டுள்ளது. இரண்டு வீடுகளில் உடைமைகள் சேதமாக்கப்பட்டுள் ளன.

மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டுவருகின் றனர். இராணுவத்தினர் சம்பவ இடத்தில் பாதுகாப்பில் ஈடுபட் டுள்ளனர்.

வாள்வெட்டுக்குள்ளான குடும் பங்களில் ஒன்று கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்தில், தங்க ளுக்குச் சிலரால் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என நேற்று முன் தினம் முறைப்பாடு செய்தது எனவும், ஆனால் பொலிஸார் எவ்வித நடவடிக்கைகளும் மேற் கொள்ளவில்லை எனவும் உற வினர்கள் தெரிவித்தனர். (ஜ)

## பலாலி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சைக்கிளில் பயணித்த வயோதி பர் வீதியைக் கடக்க முற்பட்ட வேளை எதிரே வந்த ஓட்டோவுடன் மோதி சம்பவ இடத்திலே உயிரி ழந்தார்.

உயிரிழந்த வயோதிபரின் உடல் கோப்பாய் ஆதார வைத்தி யசாலைக்குக் கொண்டு செல் லப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ஜ)

# ஜனாதிபதித் தேர்தலை பிற்போட இடமில்லை

## கூட்டு எதிரணி தெரிவிப்பு

கொழும்பு, மே 30

ஜனாதிபதித் தேர்தலைப் பிற்போடுவதைத் தடுப்பதற்குத் தேவையான சட்ட மற்றும் அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாகக் கூட்டு எதிரணி தெரிவித்துள்ளது.

கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

எந்தத் தேர்தலைப் பிற்போட்டாலும் ஜனாதிபதித் தேர்தலை பிற்போட இடமளிக்கவே மாட்டோம்.

எதிர்வரும் காலங்களில் பொதுமக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் தனியான தொரு பிரிவு அமைக்கப்படும் - என்றார். (ஐ)

# இலங்கை – இந்தியா – ஜப்பான் கூட்டு உடன்பாடு கைச்சாத்து

## கொழும்புத் துறைமுக அபிவிருத்திக்காக

கொழும்பு, மே 30

கொழும்பு தெற்கு துறைமுகத்தில் உள்ள கிழக்கு முனைய அபிவிருத்தி தொடர்பில் இலங்கை, ஜப்பான் மற்றும் இந்தியா ஆகிய நாடுகளுக்கிடையே கூட்டுறவு ஒப்பந்தம் நேற்றுமுன்தினம் கைச்சாத்திடப்பட்டது.



இலங்கையில் சீனாவின் செல்வாக்கைச் சமப்படுத்தும் வகையிலேயே, ஜப்பான் மற்றும் இலங்கையுடன் இணைந்து கொழும்புத் துறைமுக விரிவாக்கத் திட்டத்தை முன்னெடுக்க இந்தியா முடிவு செய்திருந்தது.

இதன் ஓர் அங்கமாகவே இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

கொழும்புத் துறைமுகத்தின் கொள்கலன் கையாளும் திறனை அதிகரிப்பதே இந்த முத்தரப்புத் திட்டத்தின் நோக்கமாகும்.

பிராந்தியத்தில் சீனா பல்வேறு திட்டங்களின் மூலம், தனது செல்வாக்கை உயர்த்தி வரும் நிலையிலேயே இந்தத் திட்டத்தை கூட்டாக முன்னெடுக்க இந்தியா முடிவு செய்தது.

திருகோணமலைத் துறைமுகத்தைக் கூட்டாக அபிவிருத்தி செய்யும் விடயத்திலும், ஜப்பானும் இந்தியாவும் கண் வைத்துள்ளன.

கொழும்புத் துறைமுகத்தின் தெற்குப் பகுதியில் உள்ள கிழக்கு கொள்கலன் முனையத்தை மூன்று நாடுகளும் கூட்டாக அபிவிருத்தி செய்யத் திட்டமிட்டுள்ளன. இதன் மூலம், பாரிய கொள்கலன் கப்பல்கள் வரும் வாய்ப்புகள் கிடைக்கும். (ஐ)

# நிதி அமைச்சின் ஊடகப் பணிப்பாளர் துப்பாக்கி ரவைகளுடன் கைதானார்

கொழும்பு, மே 30

நிதி அமைச்சின் ஊடகப் பணிப்பாளர் மொஹமட் அலி ஹசன் துப்பாக்கி ரவைகளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

பியகம பொலிஸார் மல்வானையில் உள்ள அவரது வீட்டில் சோதனை நடத்தியபோது, அங்கிருந்து 92 துப்பாக்கி ரவைகள் மீட்கப்பட்டன.

இந்த ரவைகள் 'போர் 12' ரகத் துப்பாக்கிகளில் பயன்படுத்தப்படுபவை. இது குறித்து மல்வானை பொலிஸார் தொடர் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ஐ)

# வடக்கு சித்த வைத்தியசாலைகளில் வர்ம சிகிச்சை முறைமை விரைவில்

யாழ்ப்பாணம், மே 30

வடமாகாணத்தில் உள்ள அனைத்துச் சித்த வைத்திய நிலையங்களிலும் வர்ம சிகிச்சை முறையை முன்னெடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என மாகாண சுதேச வைத்தியத்துறை திணைக்களம் தெரிவித்தது.

நரம்பு, எலும்பு சார்ந்த செயற்படாத உடற்பாகங்களைத் தூண்டல் மூலம் குணப்படுத்தும் ஒரு சித்த வைத்திய முறைமையே வர்ம சிகிச்சை எனப்படுகின்றது.

வடக்கு மாகாணத்தில் உள்ள 13 சித்த வைத்திய நிலையங்களில் 8 வகையான சித்த வைத்திய சிகிச்சை வழங்கப்பட்டு வருகின்றன. யோகா, அக்குபஞ்சர் உள்ளிட்ட இந்த எட்டு வகையான சிகிச்சை முறைகள் மூலம் அகம் மற்றும் புற ரீதியான சிகிச்சைகள் வழங்கப்படுகின்றன.

இதுவரையான கால பகுதியில் வர்ம சிகிச்சை யாழ்.மாவட்டத்தில் ஒரு வைத்தியசாலையில் மாத்திரமே வழங்கப்பட்டு வருகின்றது. அந்நிலையில் இந்த சிகிச்சை முறையை வடக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து மாவட்டத்தில் உள்ள சித்த வைத்தியசாலைகளிலும் வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

அதற்கு சிறப்பு பயிற்சிகள் தேவைப்பட்டமையால் இந்தியாவில் இருந்து துறை சார்ந்த நிபுணர்களை அழைத்து வடக்கு மாகாணத்தில் சுமார் 40 சித்த வைத்தியர்களுக்குப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் வடக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து சித்த வைத்திய சாலைகளிலும் வர்ம சிகிச்சைகளை வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன. (ஐ)

# வன்முறையையடுத்து கைதான 46 பேர் பிணையில் விடுவிப்பு



கொழும்பு, மே 30

நாத்தாண்டிய – கொட்டராமுல்ல பிரதேசத்தில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களையடுத்து, கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த, சந்தேகநபர்கள் 31 பேர் நேற்றுச் சரீரப் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

மாரவில மாவட்ட நீதவான் சிறிமேவன் மஹேந்திரராஜா முன்னிலையில், சந்தேகநபர்கள் நேற்று ஆஜர்படுத்தப்பட்டபோதே, நீதவான் தலா 50,000 ரூபா சரீரப் பிணையில் அவர்களை விடுதலை செய்தார்.

இம் மாதம் 13 ஆம் திகதி, நாத்தாண்டிய – கொட்டராமுல்ல பிரதேசத்தில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்த அதேவேளை, மற்றொருவர் வெட்டுக் காயங்களுக்கு உள்ளான நிலையில் தொடர்ந்தும் கொழும்பு தேசிய வைத்திய சாலையில் சிகிச்சைப் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# வைத்தியருக்கு எதிரான முறைப்பாடுகள் 190!

கொழும்பு, மே 30


குருநாகல் போதனா வைத்தியசாலையின் மகப்பேற்று வைத்தியர் சிஹாப்தீன் மொஹமட் ஷாபிக்கு எதிராக இதுவரை 190 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

சிங்கள பெண்களுக்குக் கருத்தடை சிகிச்சையளித்தார் என வைத்தியர் மீது குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. அநேகமாக அறுவைச் சிகிச்சைமூலம் குழந்தை பெற்றுக்கொண்ட பெண்களே, தமக்கு அடுத்த குழந்தை பிறக்கவில்லையென முறைப்பாடு செய்துள்ளனர்.

குருநாகல் வைத்தியசாலையில் 170 முறைப்பாடுகள் நேற்று முற்பகல் வரை பதிவாகியுள்ளன. தம்புள்ளை பொது வைத்தியசாலை, கலேவல ஆதார வைத்தியசாலைகளில் 20 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

இதேவேளை, குருநாகல் வைத்தியசாலையின் ஊழியர்கள் சிலர் நேற்று வைத்தியசாலைக்கு முன்பாக எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். வைத்தியருக்கு எதிரான பதாதைகளை அவர்கள் ஏந்தியிருந்தனர். (ஐ)

# வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்பு; அமித் வீரசிங்கவுக்கு மறியல் நீடிப்பு



கொழும்பு, மே 30

இனங்களுக்கிடையில் வன்முறைகளை ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டாரெனும் குற்றச்சாட்டில் தெல்தெனிய பகுதியில் கைது செய்யப்பட்ட மஹாசோன் பலகாய இயக்கத்தின் தலைவர் அமித் வீரசிங்கவுக்கு விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

இந்தவழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

அவரை எதிர்வரும் ஜுன் மாதம் 4ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தர விடப்பட்டுள்ளது.

கடந்த வருடம், மார்ச் மாதமளவில் திகண, தெல்தெனிய முஸ்லிம் பிரதேசங்களில் கலவரத்தை ஏற்படுத்தி, வீடுகள் மற்றும் கடைகள் உள்ளிட்ட சொத்துகளுக்கு சேதம் விளைவித்த சம்பவங்களுடன் தொடர்புடையவர் என்ற குற்றச்சாட்டில், அமித் வீரசிங்க கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். அதனையடுத்து 7 மாதங்களின் பின்னர் அவர் விடுதலை செய்யப்பட்டிருந்தார்.

இந்நிலையில், அண்மையில் நாட்டில் இடம்பெற்ற தாக்குதல்களைத் தொடர்ந்து, இனங்களுக்கும் மதங்களுக்குமிடையில் வன்முறைகளை தூண்டும் வகையில் சமூக ஊடகங்களில் செய்திகளை வெளியிட்டார் என்ற குற்றச்சாட்டில் அமித் வீரசிங்க கடந்த 14ஆம் திகதி கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இணையப் பாதுகாப்பு சட்டவரைவு தயாரானது

கொழும்பு, மே 30

இணையப் பாதுகாப்புச் சட்ட வரைவை அரசு தயாரித்துள்ளது.

இந்தச் சட்டவரைவின்படி, இணையப் பாதுகாப்புக் கட்டமைப்பொன்று நிறுவப்படும். நாட்டில் உள்ள ஆபத்தான கணினி மற்றும் கணினி வலையமைப்புக்களை அடையாளம் காணவும், கண்காணிக்கவும் சி.ஐ.ஐ. என்ற கட்டமைப்பு நிறுவப்படும்.

பொதுச் சுகாதாரம், தேசிய பாதுகாப்பு, பொருளாதார ஸ்திரத்தன்மை உள்ளிட்ட சில விவகாரங்களுடன் தொடர்புடைய கணினி வலையமைப்புக்கு இடையூறு ஏற்படுத்தும் கணினிகள் மற்றும் வலையமைப்புக்கள் அடையாளம் காணப்பட்டு, கண்காணிப்பு வலையமைப்பில் வைக்கப்படும்.

அரசு மற்றும் தனியார்துறைகளின் கணினி வலையமைப்புக்களை தேசிய இணையத்தள பாதுகாப்பு நடவடிக்கை மையம் கண்காணிக்கும்.

இணையப் பாதுகாப்புச் சட்டவரைவு பற்றி ஜுன் 6ஆம் திகதி பொதுமக்களுக்கு விளக்கமளிக்கும் நிகழ்வு இடம்பெறும்.